هداية

المكتب التعاوني للدعوة والإرشاد وتوعية الجاليات في الخبر

# இஸ்லாம் உங்கள் பார்வைக்கு..!

A.அப்துல் மஜீத் உமரி

# من محاسن الدين الإسلامي

تأليف

عبدالمجيد عمري

تاميلي

مسلم

# இஸ்லாம்
# உங்கள் பார்வைக்கு..!

## من محاسن الدين الإسلامي

﴿باللغة التاميلية﴾


المؤلف

**عبد المجيد زلفي**

**A.அப்துல் மஜீத் உமரீ**

ح المكتب التعاوني للدعوة والإرشاد وتوعية الجاليات بالأحساء ، ١٤٢٥هـ

فهرسة مكتبة الملك فهد الوطنية أثناء النشر

مكتب توعية الجاليات بالأحساء

محاسن الدين الإسلامي – تاميلي / مكتب توعية الجاليات بالأحساء – الأحساء ، ١٤٢٥هـ.

٨٠ ص ؛ ١٢ X ١٧ سم

ردمك : ٥ – ٩ – ٩٥٨٧ – ٩٩٦٠

١– الإسلام – مباديء عامة أ– العنوان

ديوي ٢١١ ١٤٢٥/٥٩٧٢

رقم الايداع: ١٤٢٥/٥٩٧٢

ردمك: ٥–٩–٩٥٨٧–٩٩٦٠

# பொருளடக்கம்


| எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1 | முன்னுரை | II |
| 2 | பார்க்கும் முன்... | 1 |
| 3 | இஸ்லாம் ஒரு வாழ்க்கைத் திட்டம் | 5 |
| 4 | ஒன்றே குலம்! ஒருவனே தேவன்! | 7 |
| 5 | மார்க்கச் சட்டங்கள் மனித குல... | 14 |
| 6 | இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள் | 16 |
| 7 | இரண்டாவது கடமை தொழுகை | 18 |
| 8 | மூன்றாவது கடமை நோன்பு | 22 |
| 9 | பணவரி என்னும் ஜகாத் | 24 |
| 10 | ஐந்தாவது கடமை ஹஜ் | 28 |
| 11 | வெளிப்படையைக் கொண்டுதான்... | 33 |
| 12 | குற்றவியல் சட்டங்கள் | 38 |
| 13 | சக்திக்கு அப்பாற்பட்ட சட்டத் திணித்தல் | 48 |
| 14 | மனித நேயத்தின் முன்வடிவம் | 50 |
| 15 | எளிமையான சட்டங்கள் | 55 |
| 16 | மார்க்க விவகாரத்தில் மூழ்கக் கூடாது | 56 |
| 17 | தவறுதல், மறதி, நிர்பந்தம்... | 61 |
| 18 | சட்டங்களும் சலுகைகளும் | 62 |
| 19 | அனைவருக்கும் ஒரே சட்டம் | 63 |
| 20 | இறுதியாக... | 64 |

# முன்னுரை

எல்லாப் புகழும் ஏக வல்லோனாகிய இறையோனுக்கே!

*அன்பு வாசக பெருமக்களே! நம் அனைவர் மீதும் இறைவனின் கருணையும் சாந்தியும் நிலவட்டுமாக!*

*இச்சிறுநூல் வழியாக உங்களைச் சந்திப்பதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. உலக விவகாரங்களில் மூழ்கிக் கிடக்கும் நமக்கு மதக் கொள்கை-கோட்பாடுகள் தொடர்பான கருத்துகளைப் பரிமாறும் வாய்ப்பைத் தந்த இறைவனுக்கே சகல நன்றிகளும்!*

*இந்தப் பிரசுரத்தில் முஸ்லிமல்லாத நண்பர்களின் மீது நான் கொண்டிருக்கிற அக்கறையை எழுத்து வடிவில் பிரதிபலித்துள்ளேன். 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற அவாவில் உரிமையோடும் கடமையோடும் இஸ்லாத்தின் மாதிரி வடிவத்தை எனது அறிவுக்குட்பட்ட வகையில் உங்கள் பார்வைக்காக வைத்துள்ளேன்.*

*இந்த வடிவம் உங்களைக் கவர்ந்தால் அதற்கு இஸ்லாத்தின் எதார்த்த நிலையும் அதை அங்கீகரித்த இறைவனுமே காரணம். ஒரு வேளை இப்பிரசுரம் இஸ்லாத்தைப் பற்றிய சரியான வடிவத்தை உங்களுக்கு அறிமுகப்படுத்தவில்லை எனில் அதற்கு நானே காரணம்; இஸ்லாமல்ல.*

முஸ்லிமல்லாத நண்பர்களுடன் நான் பழகியிருப்பதை அடிப்படையாகக் கொண்டு அவர்களுக்கு ஏற்படும் ஐயப்பாடுகளைக் கணித்து என்னால் இயன்ற வரை இந்நூலை எளிமைப்படுத்தியுள்ளேன்.

ஆங்காங்கே குர்ஆன் வசனங்களைக் கையாளும்போது அது குர்ஆனில் இடம் பெற்ற அத்தியாய எண்ணையும் வசன எண்ணையும் அடைப்புக் குறிக்குள் கொடுத்துள்ளேன். அதுபோல, நபிமொழிகளை மேற்கோள் காட்டும்போது அவை இடம்பெறும் மூல நூற்களை (புகாரீ, முஸ்லிம், திர்மிதீ போல) ஆதாரங்களாகக் குறிப்பிட்டுள்ளேன்.

இந்தப் பிரசுரத்தைச் சரிபார்த்து, ஆலோசனைகள் பல வழங்கி ஒத்துழைத்த சக நண்பர்களான அலாவுத்தீன் பாக்கவீ மற்றும் முஹம்மத் அலீ உமரீ ஆகியோருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்! அவர்களின் பங்களிப்பிற்கு இறைவனே பரிசளிக்கப் போதுமானவன்! தொடர்ந்து எனது எழுத்துப் பணிகளில் அவர்கள் காட்டி வரும் அக்கறை, இனியும் தொடர வேண்டும் என்பதே எனது பேரவா!

மதமாச்சரியங்களும் துவேஷங்களும் தலைவிரித்தாடும் இக்கால கட்டத்தில் மதங்களுக்குத் தலை வாரி, பூ வைத்து அரிதாரம் பூசி அறிமுகப்படுத்தும் பலர்

இருக்கும்போது, இஸ்லாத்தின் இயற்கை வடிவை செயற்கை அலங்காரங்கள் எதுவும் செய்யாமல் அறிமுகப்படுத்துவதில் நான் பெருமிதம் அடைகின்றேன்.

இஸ்லாத்தைத் தவறாகப் பிறர் கருதுவதற்குக் காரணமான, இஸ்லாத்தைத் தவறாகப் பிரதிபலித்த பரம்பரை முஸ்லிம்களை இந்நூலில் 'நமக்குள்ளே' பகுதியில் சாடியுள்ளேன்.

இந்நூலில் ஏதேனும் குறைகளோ குளறுபடிகளோ எது இருந்தாலும் தகவலாக, கேள்வியாக, விமர்சனமாக, ஆட்சேபனையாக எமக்குத் தெரிவியுங்கள்!

இஸ்லாத்தைப் பற்றி நீங்கள் அறிந்து வைத்திருப்பதை உரசிப் பார்க்கவோ மேலதிகமான விளக்கம் பெறவோ சந்தேகங்களுக்கான நிவர்த்தி தரவோ இந்நூல் உங்களுக்குப் பயன்பட்டால் அதுவே எனது இந்த முயற்சிக்குக் கிடைத்த வெற்றியாகி விடும். அடுத்து இதை, வல்ல இறைவன் அங்கீகரிக்க வேண்டும், அவ்வளவுதான்.

யாவருக்கும் நேர்வழிகாட்ட இறைவனே போதுமானவன்!

என்றும் அன்புடன்

அல்அஹ்ஸா
ஸவூதி அரேபியா
(1-7-2003)

அப்துல் மஜீத்

## பார்க்கும் முன்...

உலகில் பல்வேறு மதங்களும் கொள்கைகளும் கோட்பாடுகளும் பரவிக் கிடக்கின்றன. அவற்றினூடே மனித சமுதாயம் விரவிக் கிடக்கின்றது. சில மதங்களைப் பற்றி நுனிப்புல் மேய்ந்தவர்கள் அல்லது மதங்கள் என்ற பெயரில் அறிமுகப்படுத்தப்பட்ட சில சாராரின் சுய விருப்பு-வெறுப்புகளை ஆராய்ந்தவர்கள் மதங்களை மறுப்பவர்களாகவும் உருவாகியிருக்கிறார்கள்.

வருணாசிரமம், அறிவுக்கு அப்பாற்பட்ட இதிகாசங்கள், கட்டுக்கதைகள், அனுஷ்டானத்திற்கு ஒவ்வாத சட்டங்கள், உடல் ஆரோக்கியத்திற்கு எதிரான வழிபாட்டு முறைகள், மன ஆரோக்கியத்திற்குப் பொருத்தமில்லாத தியான நெறிகள், அறிவியலுக்கு முரண்பட்ட அடிப்படைகள் இப்படி ஆயிரமாயிரம் கொள்கைக் குளறுபடிகளைப் பல மதங்கள் தமது கோட்பாடுகளாகக் கொண்டிருப்பதால் அவைகளை மட்டுமே ஆராய்ந்து விட்டிருக்கும் மேதாவிகள், மதங்களைப் பற்றி, 'அவை போதையூட்டும் அபின், காட்டுமிராண்டித் தனம், காலங்கடந்த மடமை' என்றெல்லாம் தத்துவம்? பேசியிருக்கிறார்கள். ஒரு வகையில் அவர்கள் பக்கம் நியாயம் இருக்கின்றது. ஏனெனில் அவர்கள் தங்களின் கண்களில் பட்டவற்றைப் பற்றி அவ்வாறு முடிவு செய்திருக்கிறார்கள். இன்னொரு வகையில்

சரியானதைத் தேட அவர்கள் முயற்சிக்கவில்லை என்பதை மறுக்கவும் இயலாது.

இந்நிலையில் பல்வேறு மதங்களுக்கிடையே வித்தியாசமான ஒரு மார்க்கமாக விளங்கும் இஸ்லாத்தைப் பற்றி அநேகர் அறிந்திருப்பதில்லை. அல்லது மற்ற மதங்களிலுள்ள குறைகளைப் பார்த்த அதே கோணத்தில் இஸ்லாத்தையும் அணுகுவதால் அவர்களுக்குச் சத்தியம் சாத்தியமாகப்படுவதில்லை. அதைவிட மிக முக்கியமான காரணம் தொலை-தொடர்பு செய்திச் சாதனங்களின் திட்டமிட்ட சதிதான். அவைதாம் சாந்தி மயமான இஸ்லாத்திற்குச் சற்றும் சம்பந்தமில்லாத வன்முறைகளை, தீவிரவாதங்களை இஸ்லாத்தோடு தொடர்புபடுத்தி இஸ்லாத்தைப் பற்றிய மோசமான தோற்றத்தை சராசரி மக்கள் மத்தியில் உருவாக்கிவிட்டன. அந்த மாயத் திரையை அகற்றுவதற்குப் பல முயற்சிகள் ஆங்காங்கே நடைபெற்று வருகின்றன.

அந்த மாபெரும் முயற்சியில் நம்மால் இயன்ற பங்குபணியை ஆற்ற வேண்டும் என்ற பொறுப்புணர்வின் வெளிப்பாடுதான் இந்நூல் உருவாகக் காரணம். மிக முக்கியமாக இஸ்லாத்தின் சரியான கோணத்தை மக்கள் மன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் இஸ்லாத்தின் தனித்துவங்களை மாத்திரம் திரட்டி சுருக்கமாக

இந்நூலை அமைத்துள்ளேன். அத்துடன் மாற்று மதங்களைச் சாடாமல், அதன் குறைகளைத் தேடாமல், ஒப்புநோக்குக்காக மாத்திரம் மாற்று மதக்கோட்பாடுகளில் சிலவற்றை ஆங்காங்கே குறிப்பிட்டுள்ளேன். இது யாரையும் புண்படுத்து வதற்காக அல்ல; பண்படுத்தத்தான்.

இன்னொரு வகையில் மாற்றுமதக் கோட்பாடுகளை விமர்சிக்கும் தார்மீக உரிமை எனக்குண்டு. காரணம், தமிழகத்து முஸ்லிம்களில் யாரும் அரபு நாட்டு இறக்குமதியல்லர். சற்றொப்ப மூன்று தலைமுறைகளுக்கு முன்னர் எங்கள் மூதாதையர் முஸ்லிம்களல்லர்; வேற்று மதங்களிலிருந்து ஏதோ சில காரணங்களால் மாற்று மதமான இஸ்லாத்தைத் தழுவியுள்ளனர். (அவர்களின் ஜாதி, மதம் பற்றிய எந்தச் சுவடும் அவர்களின் சந்ததிகளாகிய எங்களில் இல்லாத அளவுக்கு அவற்றை இஸ்லாம் துடைத்தெறிந்துவிட்டது என்பது தனி சுகம்.) எனவே எங்கள் முன்னோர்களோடு எங்களுக்கு இருக்கின்ற உறவின் ஆழத்திற்கொப்ப அவர்கள் சார்ந்திருந்த மதத்தின் மீதும் உரிமை இருக்கிறது. யாரும் தட்டிப் பறிக்க இயலாத அந்த உரிமையின் அடிப்படையில் அதைப் பற்றி விமரிசிப்பதற்கு எனக்கு முழுச் சுதந்திரமுண்டு. எனவே சொல்பவர் யார் என்று ஆய்வதைவிட

சொல்லப்படும் கருத்து யாது? என்று ஆராய்வதே அறிவுடமையின் அடையாளம் என்ற அடிப்படையில் காய்தல் உவத்தலின்றி கருத்துகளைக் கவனிக்க வேண்டுமாய் எமது முஸ்லிமல்லாத நேயர்களை நான் அன்போடு வேண்டிக்கொள்கின்றேன்.

அந்த வகையில் தமிழ்கூறும் நல்லுலகம் இஸ்லாத்தைப் பற்றிய உண்மையான வடிவத்தைத் தெளிவாக அறிந்துகொள்ள முன்வைக்கப்படும் சிறிய முயற்சி இது.

இனி இந்த முயற்சியை ஏற்று அங்கீகரிக்க எல்லாம் வல்ல ஏக இறையோனாகிய அல்லாஹ்வே போதுமானவன்!

☆☆☆☆☆☆☆

**நிச்சயமாக, எந்தச் சமுதாயம் தன் நிலையைத் தானே மாற்றிக் கொள்ளவில்லையோ அந்தச் சமுதாயத்தை அல்லாஹ் - இறைவன் மாற்றுவதேயில்லை.**

*(அல்குர்ஆன்: 13:11)*

## இஸ்லாம் ஒரு வாழ்க்கைத் திட்டம்

மனிதன் இன்றைக்கு நிறத்தால், இனத்தால், மொழியால், கலாச்சாரத்தால், பிறப்பால், வாழ்கின்ற பகுதியால், தொழிலால், பொருளாதாரத்தால், அரசியல் ஆதாயத்தால், சார்ந்திருக்கும் துறையால், ஜாதியால், குலம்-கோத்திரத்தால், வியாதியால் இப்படி எண்ணற்ற காரணங்களால் ஏற்றத்தாழ்வுக்கு ஆளாகிக் கிடக்கின்றான்.

இத்தனை பிரிவினைகளுக்கும் அப்பாற்பட்டு அனைவருக்கும் பொதுவான - ஆரோக்கியமான - செயல்படுத்துவதற்குச் சாத்தியமான - அறிவுப் பூர்வமான - எல்லா காலத்திற்கும் ஏதுவான - எல்லா நிலப்பரப்புக்கும் தோதுவான ஒரு வாழ்க்கைத் திட்டம் அமைந்தால் அது மனிதகுலத்தின் உய்வுக்கும் உயர்வுக்கும் மட்டுமல்ல அதன் சாந்திக்கும் சமாதானத்திற்கும் காரணமாக நிச்சயம் அமையும்.

இன்றைய சூழலில் பொருளாதார பரிவர்த்தனை, எழுதுபொருட்கள், தொலை-தகவல் தொடர்பு - போக்குவரத்து - விஞ்ஞான ஆற்றல்கள் எல்லாம் போதுமான அளவுக்கு முன்னேறிவிட்டன. ஆனாலும் வளரும் நாடுகள் முதல் வளர்ந்துவிட்ட வல்லரசு நாடுகள்வரை அங்கிங்கெனாதபடி எங்கும் “எங்கே நிம்மதி?” என்று ஏங்கும் நிலையைப் பார்க்கின்றோம்.

மனிதனின் அன்றாடத் தேவைக்கப்பால் ஆன்மீகத் தேவையும் ஒன்றுண்டு. இரண்டில் எந்த ஒன்று நிறைவேற்றப்படாமல் போனாலும் மனிதனின் பாடு திண்டாட்டம்தான். இந்த உண்மை மானசீகமாக எல்லோராலும் உணரப்பட்டு வருகின்றது. அது வரவேற்கத்தக்கதுதான். ஆனால் ஆன்மீகம் அவசியம் என்று உணர்ந்தவர்கள் (STRESS) மன உளைச்சலுக்கு ஆளாகி ஆன்மீகத்தின் அரிச்சுவடிகளை அறியாமல் அவசர அவசரமாக அனாச்சாரமான முடிவுகளை மேற்கொள்கின்றனர். மனித இயல்புகளான, உள்ளுணர்வுகளான பாசங்களையும் ஆபாசங்களை யும் இழந்துவிட்டால் - அவற்றைச் சிற்றின்பங்கள் என ஒதுக்கிவிட்டால் - மனித சஞ்சாரமற்ற பகுதிகளில் ஒதுங்கிவிட்டால் ஆன்மீக விருட்சத்தின் அசகாய நிழலில் ஆழ்ந்து உறங்கலாம் என்று அநியாயமாய் ஆசைப்படுகிறார்கள். அந்தச் சிற்றின்பங்களே பேரின்பங்களுக்கு நம்மை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் என்பதை இவர்கள் அறிகின்றார்களில்லை. சுவரில்லாமல் சித்திரம் வரையத் துடிக்கும் உற்சாக மடையர்கள். பாவம் இவர்கள் இலவு காத்த கிளிகளாய் ஏமாந்து போகின்ற அனுதாபத்திற்கு உரியவர்கள். இந்த இலவு காத்தக் கிளிகளின் பட்டியலில் தலையணைத் தயாரிக்கும் தந்திரம் தெரிந்தவர்களும் உண்டு. அவர்கள்தாம் தங்களது ஏமாற்றத்தை

ஈடுகட்டுவதற்காகப் பிறரை ஏமாற்றிக் குளிர்காயும் SADIST-கள்; ஆன்மீகம் என்ற பெயரில் பெண் மோகத்தை அரங்கேற்றி ஆன்மீகத்தையே அசிங்கப் படுத்தியவர்கள். சாமியார் என்றதும் சராசரி சமூகமே தலைதெறிக்க ஓடுவதற்கு அதுதானே காரணம்!

இந்நிலையில் ஆன்மீக ஞானத்தை அன்றாட வாழ்க்கையுடன் அனாயாசமாய்ப் பிசைந்தூட்டும் அருமைப் பாசறையாய் - சராசரி மனிதனுக்கும் ஆளும் அரசனுக்கும் முறையே உரிமையையும் கடமையையும் பக்குவமாய்ப் பகிர்ந்தளிக்கும் அரசியல் சாசனமாகவும் ஆண்டவனின் அங்கீகரிக்கப் பெற்ற ஆனந்த மார்க்கமாகவும் மனித வாழ்க்கையின் நாகரீகத் திட்டமாகவும் விளங்குவது இஸ்லாமிய மார்க்கம். இனி அதன் தனித்துவங்களைப் பற்றி விரிவாகப் பார்க்கலாம்.

## ஒன்றே குலம்! ஒருவனே தேவன்!

ஒன்றே குலம்! ஒருவனே தேவன்! -இவ்வாறு சொன்னவர் திருமூலர். அவர் சார்ந்திருந்த மதம் கூட இதைக் கொள்கையாகக் கொள்ளவில்லை. ஆனால் இஸ்லாத்தில் இக்கோட்பாடு அடிப்படையாகப் பேணப்படுகின்றது.

மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம். நீங்கள்

ஒருவரையொருவர் அறிந்துகொள்ளும் பொருட்டு பின்னர் உங்களைக் கிளைகளாகவும் கோத்திரங்களா கவும் ஆக்கினோம். (அல்குர்ஆன்: 49:13)

நாம் அனைவரும் ஒரு தாய் பெற்ற மக்கள் என்று குர்ஆன் கூறுகின்றது. குலம் கோத்திரம் என்று பிரிந்ததெல்லாம் பின்னாளில்தான் என்றும் அதுவும் மனிதர்கள் தங்களை அடையாளப்படுத்திக் கொள்வதற்காக இறைவனே உருவாக்கித் தந்த வசதிகள்தாம் என்றும் இந்த இறைவசனம் தெளிவுபடுத்துகின்றது.

முஹம்மத் நபி (ஸல்) அவர்களும் 'எந்தச் சிவப்பருக்கும் கருப்பரை விடச் சிறப்பு கிடையாது. எந்த அரபியரும் அரபியல்லாதவரை விடச் சிறந்தவரல்லர்' (நூல்: அஹ்மத்) என்று கூறி நிற - மொழி பேதங்களை ஒழித்திருக்கிறார்கள்.

எனவே இது வெறும் தத்துவார்த்தமாக மட்டுமல்லாமல் நடைமுறையிலும் பேணப்பட்டு வருகின்றது. இனி, 'ஒருவனே தேவன்!' என்ற கொள்கைக்கு வருவோம். ஓரிறைக் கோட்பாட்டையும் கூட ஆழமாக வலியுறுத்தி அதையே அடிப்படைச் சித்தாந்தமாகப் பிரகடனப்படுத்தும் மார்க்கம் இஸ்லாம் ஒன்றே! திரித்துவம், பலதெய்வக் கோட்பாடு என்றெல்லாம் வெளிப்படையாகப்

பேசக்கூடிய மதவாதிகளினூடே “எங்களது மதக் கோட்பாடும் ஒரே தேவன் என்பதுதான். ஆனால் பாமரர்கள் புரிந்துகொள்வதற்காக படைத்தல், காத்தல், அழித்தல் என்ற இறையோனின் மூன்று பிரத்யேகத் தொழில்களை அடிப்படையாகக் கொண்டு நாங்கள்தான் மூன்று தெய்வங்களாகப் பிரித்துள்ளோம்” என்று சொல்பவர்களும் உண்டு.

ஆனால் இஸ்லாம், படித்தோருக்கும் பாமரர்களுக்குமிடையே கடவுளைக் கூறு போடாமல் எல்லோருக்கும் ஒரே இறைவன் என்ற கோட்பாட்டை ஒளிவுமறைவு இல்லாமல் ஓங்கி ஒலிக்கின்றது. “உங்களது இறைவன் ஒரே இறைவன்தான்!” என்று குர்ஆன் ஒன்றுக்கும் மேற்பட்ட இடங்களில் கூறுகிறது. மேலும் கடவுட்கொள்கை பற்றி அது சுருக்கமாக, முழுமையாகக் கூறுவதைப் பாருங்கள்:

(நபியே!) நீர் கூறும்: அவன் அல்லாஹ் ஒருவன்! அல்லாஹ் தேவையற்றவன் (யாரையும் குழந்தையாகப்) பெற்றெடுக்கவில்லை; (யாருக்கும் குழந்தையாகப்) பிறக்கவுமில்லை. அவனுக்கு இணையாக யாரும் (எதுவும்) இல்லை. (112-ஆவது அத்தியாயம்) இன்னும் ஒருபடி மேலே போய் ஒன்றுக்கு மேற்பட்ட இறைவன் இருப்பது சாத்தியமில்லை என்று வாதிடவும் செய்கின்றது குர்ஆன்:

(வானம், பூமி ஆகிய) இவ்விரண்டிலும் அல்லாஹ்வையன்றி வேறு பல தெய்வங்கள் இருந்திருந்தால் நிச்சயமாக இவையிரண்டும் அழிந்தே போயிருக்கும். (21:22)

அதாவது, ஒன்றுக்கு மேற்பட்ட கடவுளர்கள் இருந்தால் ஒவ்வொருவரும் தத்தமது விருப்பங்களை நிறைவேற்ற முயலும்போது போட்டிகளும் பொறாமைகளும் ஏற்படும். உதாரணமாக இறைவனின் பிரத்யேகத் தொழில்களான படைத்தல் - காத்தல் - அழித்தல் ஆகிய முத்தொழில்களை எடுத்துக் கொள்வோம். மூன்று தொழில்களுக்கும் மூன்று கடவுள்கள் என்றும் கற்பனை செய்து கொள்வோம். காத்துக் கொண்டிருக்கும் கடவுள் ஒரு மனிதனுக்கு வாழ்வளித்துக் கொண்டிருக்கும்போது அழிக்கக்கூடிய கடவுள் அதே மனிதனை அழிக்க வேண்டும் என்று கருதினால்..? இரண்டு கடவுள்களின் இரு வேறான விருப்பங்களுக்கொப்ப அந்த மனிதன் வாழ்ந்து கொண்டிருக்கும் அதே நிலையில் எப்படி அழிய இயலும்? அப்படியானால் வாழ்வா சாவா என்ற இரண்டில் ஒன்றுதான் நிகழும். அப்போது இரு கடவுள்களில் ஒருவன் நிச்சயம் தோற்றுப்போவான். தோற்பவன் கடவுளாக இருக்க முடியாது என்பது வெள்ளிடை மலை.

இல்லை, கடவுள்கள் தங்களுக்குள் (ADJUST)

விட்டுக்கொடுத்துச் சமாளித்துக் கொள்வார்கள் என்று யாரேனும் கருதினால், தனது சுய விருப்பத்தை நிறைவேற்ற இயலாமல் அடுத்தவனுக்கு விட்டுக் கொடுக்க வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளாக்கப் படுபவன் எவ்வாறு கடவுளாக இருக்க முடியும்? என்ற கேள்வி எழும்.

அத்துடன் கல்லாய், கருவியாய், மண்ணாய், மரமாய், சூரியன்-சந்திரனாய், நெருப்பாய், சமுத்திரமாய், அன்னையாய், பிதாவாய், குருவாய், செய்யும் தொழிலாய் இப்படி கடவுள் எல்லாமுமாய்ப் பரிணாமம் பெறுவதாகக் கருதுகின்றனர் பலர். இயலாமை, இயற்கை நியதி போன்ற பலவீனங்களுக்குக் கட்டுப்பட்டவர்களைக் கடவுளுக்கு இணையாக அல்லது கடவுளாகவே கருதுவதை ஜீரணிக்க இயலவில்லை. எனவேதான் ‘நிச்சயமாக இறைவனுக்கு இணையாக - சமமாக யாரையும் எதையும் கருதுவது மாபெரும் அக்கிரமம்’ (31:13) என்றும் குர்ஆன் எச்சரிக்கின்றது.

இந்தத் தத்துவார்த்தத்தை தத்ரூபமாக இஸ்லாமியர்களின் வாழ்வில் காணலாம். உலகின் எந்த மூலை முடுக்குகளிலுள்ள முஸ்லிமாக, எந்த மொழி பேசக்கூடியவனாக இருந்தாலும் சரி அவனது இறைவனைப் பற்றி அவனிடம் கேட்டால் அவன் ‘அல்லாஹ்!’ என்ற ஒரே இறைவனையே பதிலாகக்

கூறுவான். இது நிதர்சனமான உண்மை.

மேலும் இஸ்லாத்தில் இறைவனுக்குக் குறிப்பிட்ட உருவம் கற்பனை செய்யப்படுவதில்லை. அவன் அவனது தனித் தகுதிக்கேற்ற வடிவத்தில் அமைந்திருக்கிறானேயன்றி அவன் நம்முடைய அனுமானத்திற்குட்பட்டவனல்லன்.

பல்வேறு உருவங்கள் கற்பிக்கப்படுகின்ற போது அதனால் ஏற்படும் தவறான விளைவுகளைச் சிலர் கருத்தில் கொள்கிறார்க ளில்லை. கடவுளின் கரங்களில் வில்-அம்பு, வாள்-கேடயம், கத்தி-அரிவாள், ஈட்டி-சூலாயுதம், பயங்கரமான கோரைப் பற்கள் எனப் பல ஆயுதங்களோடு கடவுள்களைக் கற்பனை செய்பவர்கள் இவ்வாயுதங்களின் பயன்பாடுகள் வரையறுக்கப்பட்டுள்ளன என்பதை அறியத் தவறி விடுகின்றனர். கடவுளை இரண்டுக்கும் மேற்பட்ட கைகளோடு கற்பனை செய்பவர்களும் உண்டு. ஒரு கடவுளுக்கு பத்து கைகள் உண்டெனக் கருதினால் அந்தக் கடவுளால் ஐந்து சராசரி மனிதனின் ஆற்றலை மட்டுமே பிரயோகிக்க இயலும் என்றுதானே அர்த்தம்?

இவ்வாறு கடவுளின் ஆற்றலை வரையறுப்பது இறையிலக்கணத்திற்கு முரணல்லவா?

எனவே கடவுள் இருப்பது எப்படி

உண்மையோ அப்படியே அவனுக்கு உருவம் இருப்பதென்பதும் உண்மை. ஆனால் அவனது ஆற்றல் எவ்வாறு வரையறைக்கு அப்பாற்பட்டதோ அவ்வாறே அவனை உருவகப்படுத்துவதும் கற்பனைக்கு அப்பாற்பட்டது என்பதே இஸ்லாத்தின் தெளிவான கண்ணோட்டம்.

முஸ்லிம்களிடமும் பல தெய்வக் கோட்பாடு உள்ளதே! நாகூர் ஆண்டவர், முஹ்யித்தீன் ஆண்டவர் போன்ற பல ஆண்டவர்களும், ஏர்வாடி, ஆற்றங்கரை, அஜ்மீர், பீமா பள்ளி எனப் பல புனிதத் தலங்களும் இருப்பதாகக் கேள்விப் படுகின்றோமே! இதில் நாங்கள் நட்டி வைத்து வணங்குவதற்கும் நீங்கள் படுக்க வைத்து வணங்குவதற்குமுள்ள வேறுபாட்டைத் தவிர வேறு என்ன வித்தியாசமுள்ளது? என்று நீங்கள் கேட்கலாம். இது நியாயமான சந்தேகம்தான்.

நாகூர், அஜ்மீர், பொட்டல்புதூர், ஏர்வாடி போன்ற பகுதிகளில் சமாதியாகியிருப்பவர்கள் ஆண்டவர்களல்லர்; ஆண்டகைகள். அதாவது பெருந்தகைகள். இறந்துபோன பிரபலமான அக்காலத்து மனிதர்கள். அவர்களை மரியாதை செய்கின்றோம் என்ற பெயரில் முஸ்லிம்கள் சற்று வரம்பு மீறி விடுகின்றனர். இது இஸ்லாத்தின் அடிப்படையைப் பற்றிய போதுமான

அறிவில்லாமையையே காட்டுகின்றது. காரணம் மனிதன் தெய்வமாகலாம் என்றெல்லாம் இஸ்லாத்தில் எந்தக் கருத்தும் இல்லை. எனவே சமாதி வழிபாட்டிற்கு இஸ்லாத்தில் துளியும் ஆதாரமில்லை.

*<u>நமக்குள்ளே:</u> இஸ்லாத்தைப் பிரதிபலிக்க வேண்டிய முஸ்லிம்களின் தவறான நடவடிக்கைகளைக் கண்டுதான் பிறர் இப்படியெல்லாம் கேட்கின்றனர். இதற்காக முஸ்லிம்கள் வெட்கப்பட வேண்டும். சமாதியில் அடங்கியிருக்கும் முன்னோர்கள் உண்மையில் மார்க்கத்திற்காக உழைத்த மரியாதைக்குரியவர்களாக இருந்தால், (பலருக்கு வரலாறே கிடையாது) அதற்கான சன்மானங்கள் இறைவனிடம் கிடைக்கும் நாம் அவர்களின் பிழை பொறுத்தலுக்காகவும் உயர் அந்தஸ்த்து பெறுவதற்காகவும் அல்லாஹ்விடம் பிரார்த்திக்க வேண்டும், அவ்வளவுதான்.*

*ஏனெனில் மகான்களுக்கெல்லாம் மகானாக நாம் கருதும் முஹம்மத் நபி (ஸல்) அவர்களே கூட "எனது மண்ணறையை விழா கொண்டாடும் இடமாக ஆக்கிவிட வேண்டாம்!" என்று கூறியுள்ளார்கள். எனவே இந்த கப்ரு - சமாதி வணக்கங்களை விட்டொழியுங்கள்! இஸ்லாத்தின் சரியான வடிவத்தை உங்களின் நடவடிக்கைகளால் பிரதிபலியுங்கள்!*

**<u>மார்க்கச் சட்டங்கள் மனிதகுல மேம்பாட்டுக்காகத்தான்!</u>**

நீங்கள் நன்மை செய்தால் உங்களுக்கே நன்மை செய்துகொள்கின்றீர்கள்! நீங்கள் தீமை செய்தால் அதுவும் உங்களுக்கே தீமையாகும். (17:7)

மதம் - மார்க்கம் விதிக்கின்ற கட்டுப்பாடுகள், சட்டதிட்டங்கள் யாவும் தனிமனிதன் மற்றும் சமூக மேம்பாட்டுக்கு வித்திட வேண்டும். இறைவனுக்காக மேற்கொள்ளப்படும் வழிபாடுகளில் யாருக்கும் நிரந்தரமாகவோ தற்காலிகமாகவோ பாதகம் ஏற்படக் கூடாது என்பதுடன் மேற்கொள்ளக் கூடியவர்களுக்குப் பல சாதகங்கள் ஏற்படவும் வேண்டும். ஒரு மதத்தைச் சார்ந்தவன் இதையெல்லாம் தான் அந்த மதத்திலிருந்துப் பெற வேண்டும்; அந்த மதம் அவற்றைத் தமக்குத் தர வேண்டும் என்று எதிர்பார்ப்பது நியாயம். சற்று இறங்கிச் சொல்வதானால், 'இதன் நன்மைகள் இறை திருப்தியைப் பெறுவதுதான்.

எனவே இதை அடுத்த ஜென்மத்தில் - பரலோக இராஜ்யத்தில் - மறுமை வாழ்வில் அனுபவிக்கலாம்' என்று கூறி நன்மைகள் கிடைப்பதற்கு அவகாசம் எடுத்துக்கொண்டாலும் பரவாயில்லை, அவ்வழிபாட்டு முறைகளால் - ஆச்சாரங்களால் குறைந்தபட்சம் உள்ளம் - உடலின் ஆரோக்கியங்கள் கெடாமலாவது இருக்க வேண்டும்.

இஸ்லாத்தைப் பொருத்தவரை அதன் அடிப்படைக் கடமைகளாக வகுக்கப்பட்டிருக்கும் வழிபாட்டு முறைகள் உள்ளமும் உடலும் சார்ந்த அம்சங்களாகும். அவற்றின் பலன்களை மறுமையில்

அனுபவிக்கலாம், இறைதிருப்தியைப் பெறலாம் என்னும் பொது நன்மைகளுக்கப்பால் அன்றாட வாழ்க்கையில் அதன் நலன்களைச் சுவைக்கலாம் என்கிற அளவுக்கு அவை இறைவனால் அமைக்கப் பட்டுள்ளன. அவற்றைச் சுருக்கமாகப் பார்க்கலாம்:

**இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள் ஐந்து:**

**முதல் கடமை - சாட்சியம் கூறல்:**

வணக்கத்திற்கு உண்மையில் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் - எதுவுமில்லை. முஹம்மத் நபியவர்கள் இறைவனின் திருத் தூதராவார்கள் என்று சாட்சியம் - உறுதியளித்தல்.

ஒன்று இறை; ஒரே தூதரின் வழிமுறை! என்ற நம்பிக்கையின் தத்துவமிது. எனது கடவுள் பெரிது, உனது கடவுள் சிறிது என்ற போட்டிக்கு இங்கு இடமில்லை. ஒரு சாரார் இன்னொரு சாராரின் வழிபாட்டுத் தலங்களையோ சிலைகளையோ உடைப்பதற்கு அதுதானே முக்கியக் காரணம்?

குர்ஆன் கூறுவதைப் பாருங்கள்: *அவர்கள் அழைக்கும் அல்லாஹ் அல்லாதவற்றை நீங்கள் ஏசாதீர்கள் (அப்படி ஏசினால்) அவர்கள் அறிவின்றி, வரம்பை மீறி அல்லாஹ்வைத் திட்டுவர். (6:108)*

மேலும் எந்தக் கடவுளை வணங்குவது? ஒரு கடவுளை வணங்கும்போது இன்னொரு கடவுளை

விட்டமாதிரி ஆகிவிடுமே! கல்விக்கொரு கடவுள் காசுக்கொரு கடவுள் என்று ஏற்றுக்கொண்டால் கல்வியைத் தரும் கடவுளுக்கு காசு தர இயலாமல் போனது ஏனோ? என்ற கேள்வி எழும். காசு தரும் கடவுளிடத்தில் கல்வி இல்லாமற்போனது எவ்வாறு? இப்படி எண்ணற்ற வினாக்கள் தொடரும். இதனால் வீண் குழப்பங்களே மிஞ்சும். இஸ்லாத்தில் இக்குழப்பங்களுக்கெல்லாம் அறவே இடமில்லை.

அதுபோல கடவுளைப் பற்றி நமக்கு அறிமுகம் செய்யும் தகுதியுள்ள ஒரே மனிதர் இறைத் தூதராகக் கருதப்படும் முஹம்மத் (ஸல்) மட்டுமே! இறைவனால் இந்தச் சமூகத்திற்கு வழங்கப்பட்ட சட்டதிட்டங்கள் நடைமுறைச் சாத்திய மானவைதாம் என்ற உண்மையை உலகுக்கு உணர்த்தும் முகமாக அவற்றைத் தமது சொந்த வாழ்வில் சாதித்துக் காட்டியுள்ளார்கள் அந்த தூதர்.

இறைவேதம் குர்ஆனும் அதன் விளக்க உரையான இறைத்தூதரின் வாழ்வும் வாக்கும் மட்டுமே இஸ்லாத்தின் ஆதார அடிப்படைகள் என்ற வகையில் வேறு யாருக்கும் இஸ்லாத்தைப் பற்றி தனிக்கருத்துக் கூறவோ அல்லது அதைத் திணிக்கவோ இங்கு இடமில்லை.

ஆனால் சில மதங்களின் கடவுட்

கொள்கையிலேயே குழப்பம் நிறைந்திருப்பதைக் காணலாம். சிலர் த்வைதம் என்கின்றனர். மற்றும் சிலர் அத்வைதம் என வாதிடுகின்றனர். காரணம் அவரவரும் கருத்துச் சொல்லுமளவுக்கு ஏராளமான ஆதார புருஷர்களும் அவதார புருஷர்களும் அங்கே உள்ளனர். தனிமனிதனே கடவுளாக முக்தி பெறலாமென்றும் கடவுளே தனிமனிதனாக அவதரிக்க முடியுமென்றும் கடவுட்கொள்கையின் தனித்துவமே தாளம்போடும் நிலையும்கூட உள்ளது. இவ்வாறான எந்தச் சிக்கலுமில்லாத கடவுட் கொள்கையை இஸ்லாம் வழங்குவதால் மனக் குழப்பங்களுக்கோ வீண் சர்ச்சைகளுக்கோ இதில் துளியும் வாய்ப்பில்லை.

**இரண்டாவது கடமை தொழுகை**

கட்டாயமாகக் குளிக்க வேண்டிய காரணங்களின் அடிப்படையில் குளித்து சுத்தமான வர்கள், சராசரி ஆடை அணிந்திருக்கும் நிலையில் தமது மேனியில் புழுதிபடும் பகுதிகளை நீரால் கழுவி அல்லது ஈரக்கையால் தடவி மேலும் சுத்தப்படுத்திக்கொண்டு ஒரு நாளைக்கு ஐந்து வேளைகளில் தொழுகையை நிறைவேற்ற வேண்டும். இந்தத் தொழுகையில் இறைவனோடு நேரடியாக உரையாடிய அனுபவமும் தனது தேவையை

அவனிடம் மன்றாடிய உணர்வும் அவனுக்கு பிரத்யேகமாகக் கிடைக்கின்றன. அவைபோக உடல் ரீதியான ஆரோக்கியத்திற்கு வித்திடும் யோகாசன - உடற்பயிற்சிகளின் வீரியத்தையெல்லாம் மிஞ்சக்கூடிய அளவுக்கு தொழுகை பல பலன்களைத் தருகின்றது. அதற்குச் சான்றாக சில குறிப்புகள்:

3 டிஸம்பர் 1999 தேதியிடப்பட்ட தினமணி இணைப்பான வெள்ளிமணியின் மருத்துவமணி பகுதியில் சென்னை, திருவான்மியூரிலுள்ள உலக சமுதாய சேவா சங்கத்தின் பொதுச்செயலாளர் அஜ்ஜே கவுடர், வேதாத்ரி மகரிஷியின் அனுபவங்களை மேற்கோள்காட்டி "மன வளத்துடன் வாழ தியானம்" என்ற தலைப்பில் ஒரு பேட்டிக் கட்டுரை எழுதியுள்ளார். அந்தக் கட்டுரையில் 'தியானம்' என்ற வார்த்தை இடம்பெறும் இடங்களிலெல்லாம் அதற்குப் பகரமாக தொழுகை என்று போட்டுவிட்டால் சாலப் பொருந்தும் என்று சொல்லுமளவுக்கு தியானத்தைப் பற்றி அவர் குறிப்பிடும் விதிகள் அநேகமாக தொழுகையின் நெறிகளோடு பொருந்திப் போகின்றன. அதில் இஸ்லாத்திற்கு உடன்பாடில்லாத சில கருத்துக்களும் உள்ளன என்றாலும் பல கருத்துகள் ஒன்றிப் போகின்றன. அது பற்றிய ஓர் ஒப்பு நோக்குக்காக தியானத்தைப் பற்றிய அந்தக் கட்டுரையின் சில

குறிப்புகளுடன் (வார்த்தைகளை மாற்றாமல்) தொழுகையின் முறைகளையும் இணைத்து இவண் பட்டியலிட்டுள்ளேன்.

| எண் | தியானம் | தொழுகை |
|---|---|---|
| 1 | நமது அன்றாட வாழ்வின் மனச் சோர்வைத் தளர்த்திக் கொள்ள அன்றாட வாழ்க்கையின் இடையிலேயே இதைச் செய்யலாம். | வைகறை, பகல், பிற்பகல், மாலை, இரவு என அன்றாட வாழ்க்கையின் ஐந்து வேளைகளில் தொழுகையை நிறைவேற்ற வேண்டும். |
| 2 | தற்சோதனையின் மூலம் காமம், குரோதம் உள்ளிட்ட ஆறு தீயகுணங்களைப் பொறுமை, கருணை ஆகிய நல்ல குணங்களாக மாற்றிவிடலாம் | நிச்சயமாக தொழுகை மானக்கேடான, வெறுக்கத் தக்கக் காரியங்களிலிருந்து மனிதனைத் தடுக்கின்றது என்று குர்ஆனின் (29:45) வசனம் கூறுகின்றது. |
| 3 | உடற்பயிற்சிகள் அனைத்தையும் செய்துமுடிக்க 30 நிமிடங்கள் போதும். | கடமையான ஐந்து தொழுகைகளை மட்டும் நிறைவேற்ற சராசரியாக ஆறு நிமிடங்கள் போதும். (5 × 6 = 30) |
| 4 | உடற்பயிற்சியை ஏழு வயதிலேயே கூட தொடங்கலாம். | 'குழந்தைகள் ஏழு வயதை அடைந்ததும் தொழுமாறு ஏவுங்கள்!' என்பது முஹம்மத் நபியின் கூற்று. |
| 5 | மாதவிலக்கு சமயத்தில் பெண்கள் பயிற்சி செய்யக்கூடாது. | மாதவிலக்கு மற்றும் பேறுகால விலக்கின் போது பெண்கள் தொழக்கூடாது. |

| | | |
|---|---|---|
| 6 | விக்கிரகத்தை வழிபட வேண்டும் என்ற நிர்பந்தமில்லை. | இஸ்லாத்திற்கும் விக்ரக வழிபாட்டிற்கும் தொடர்பே இல்லை; மாறாக அதை மறுக்கிறது |
| 7 | மனித உடலின் சிற்றறைகள் (செல்கள்) பூமியின் மையப் பகுதியை நோக்கி இழுக்கப்படுகின்றன. | மக்காவிலுள்ள கஃபா ஆலயத்தை நோக்கி தொழுகையை நிறைவேற்ற வேண்டும். மக்கா, பூமத்திய ரேகையின் அடிப்படையில் பூமியின் நடுவில் உள்ளது. |
| 8 | குண்டலினி யோகம் செய்யும்போது புகையிலையை எந்த வகையிலும் பயன்படுத்த வேண்டாம்! | 'வெங்காயம், பூண்டு முதலான நாற்றமெடுக்கும் பொருட்களை(ப் பச்சையாக) உண்பவர் தொழும் தலங்களுக்கு வரவேண்டாம்!' என்பது நபிமொழி. |
| 9 | போதை தரும் பொருட்களையோ மயக்க மாத்திரைகளையோ அருந்தக்கூடாது. | 'போதையுடன் தொழுகையை நெருங்காதீர்!' என்பது குர்ஆன் (4:43) வாக்கு. |
| 10 | இதற்குத் தேவை விடா முயற்சியும் நாள் தவறாமல் இரு வேளைகளும் செய்வதும்தான் | கடமையான தொழுகையை விடாமல் ஐந்து வேளைகளும் நிறைவேற்ற வேண்டும். |

*நன்றி: தினமணி*

இது போக, தொழுகை தரும் பண்பாடுகளையெல்லாம் தெளிவாக எனது 'தொழுகையில் இத்தனைத் தத்துவங்களா?' என்ற

நூலில் விவரித்துள்ளேன். எனவே இத்துடன் சுருக்கிக்கொண்டு அடுத்த கடமைக்குப் போகலாம்.

**மூன்றாவது கடமை நோன்பு:**

வருடத்தில் ஒரு (ரமளான்) மாதகால பகற்பொழுதில் உண்ணல், பருகல், உடலுறவு கொள்ளல் ஆகிய மூன்றையும் இறைவனுக்காக தியாகம் செய்து உபவாசமிருத்தலே நோன்பு. இதனால் ஒருமாத கால அரை நாள் ஓய்வு ஜீரண உறுப்புகளுக்குக் கிடைக்கிறது. பட்டினி கிடைப்பதை விட பத்தியமிருப்பதே அதிகச் சிரமமானது. ஏனெனில் எதுவுமே இல்லாததால் அனுபவிக்காமல் கிடப்பது பட்டிணி; எல்லாமிருந்தும் ஓர் இலட்சியம் அல்லது நோக்கத்திற்காக அவற்றை நெருங்காமலிருப்பது பத்தியம். இவ்வாறாக "பத்தியமே தலையாய வைத்தியம்!" என்ற கட்டுப்பாட்டு உணர்வு கைவசமாகின்றது.

*மானம், குலம், கல்வி, வன்மை, அறிவுடமை,*
*தானம், தவம், முயற்சி, தாளான்மை - தேனின்*
*கசி வந்த சொல்லியற்மேல் காமுறுதல் பத்தும்*
*பசி வந்திடப் பறந்து போம்!* - ஔவையார்.

அதாவது, பசி வந்தால் *மானம், குலம், கல்வி, வன்மை, அறிவுடமை, தானம், தவம், முயற்சி, தாளான்மை, காமம்* ஆகிய பத்தும் பறந்து

போகுமாம். ஆனால் பசியை அனுபவிக்கும் நோன்பில் இவற்றில் ஒன்றுகூட பறப்பதில்லை. அதாவது அந்தப் பத்தையும் நம் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்ளும் அசகாய பயிற்சி இதில் நமக்குக் கிடைக்கின்றது.

*ஒரு நாளைக்கு ஒழி என்றால் ஒழியாய்!*
*இரு நாளைக்கு ஏல் என்றால் ஏலாய்!*
*இடும்பைக் கூறென் வயிறே!*
*உன்னோடு வாழ்தல் அரிது!*

பெண்பாற்புலவர் ஔவை மூதாட்டி வயிற்றைப் பற்றிக் கூறிய பொதுவான கருத்து இது. அவருக்கே அரிதான அம்சத்தையும் எளிதாக்கும் வித்தையை நோன்பு சராசரி மனிதனுக்கும் கற்றுத் தருகின்றது எனில் அதை ஒரு பண்பாட்டுப் பாசறை என்று சொல்வதில் மிகையேது? புளிச்சேப்பக் காரர்களுக்கு பசியேப்பக்காரர்களின் நிலைமை இதனால் புரிய வைக்கப்படுகின்றது. அதாவது ஏழைகளின் பசிக்கொடுமையை உணர முடிகின்றது. 'பணக்காரனுக்குப் பசியை அறிமுகப்படுத்தினால் பணக்காரன் ஏழைகளுக்குப் பணத்தை அறிமுகப் படுத்துவான்' என்ற தத்துவம் செயல்வடிவம் பெற வழி பிறக்கின்றது. ஆமாம் பணக்காரனும் ஏழையைப் போல் பசித்திருந்து, தாகித்திருப்பது மட்டுமின்றி நோன்பின் முடிவில் ஏழையைப் போலவே கஞ்சி

குடிப்பதையும் காணலாம். பணக்காரனைப் பட்டினி கிடக்க வைப்பதும் கஞ்சி குடிக்க வைப்பதும் மிகப் பெரும் சாதனைகளல்லவா?

மேலும் சொந்தப் பொருட்களையே அனுபவிக்காமல் நமக்குள் நாம் விதிக்கும் கட்டுப்பாட்டைச் செயல்படுத்துவதன் மூலம் அடுத்தவனின் பொருளாதாரத்தை அபகரிக்க அலை பாயும் அடி மனதை அடக்கும் ஆளுமை பெறலாம். கட்டுப்பாடற்ற காமத்தால் ஏற்படும் கயமைகள் களையெடுக்கப்படும்.

உண்ணல், பருகல், உடலுறவு கொள்ளல் மட்டுமல்ல பொய்பேசுதல், பொய்சாட்சி கூறல், வீண் சர்ச்சை செய்தல் போன்றவற்றையும் நோன்பு நோற்பவன் தவிர்க்க வேண்டும் என்றும் இஸ்லாம் வலியுறுத்துகின்றது. இதனால் ஒழுக்கமும் பண்பாடும் வளரும். இன்னும் எத்தனையோ நன்மைகள் நோன்பின்மூலம் மலரும். அதன் பட்டியல் தொடரும்.

**நான்காவது பணவரி என்னும் ஜக்காத்:**

*பாடுபட்டுச் சேர்த்துப் பணத்தைப் புதைத்துவைத்து*
*கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்! – கூடுவிட்டுங்*
*காவி பறந்தபின் யாரே அனுபவிப்பார்*
*பாவிகாள், அந்தப்பணம்?* –நல்வழி

செல்வந்தர்கள் ஏழைகளுக்கு வழங்க

வேண்டிய கட்டாய வரி அது. நோன்பின் உந்துதலினால் வெளிப்பட வேண்டிய கடமை என்றும் அதைச் சொல்லலாம்.

உலகில் பல தீமைகள் விளைய பல காரணங்கள் இருக்கலாம். அவற்றில் முக்கியமான காரணம் பொருளாதார ஏற்றத்தாழ்வு அல்லது வறுமை என்று சொன்னால் அதை மறுக்கவியலாது. அந்த வறுமையை ஒழிப்பதில் ஜகாத்தின் பங்கு முக்கியமானது.

உண்ண உணவு, உடுத்த உடை, உறங்க உறைவிடம் போன்ற அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றும் அளவுக்கு வசதியற்றவர்கள், வசதியுள்ளவர்களின் உதவிகளை எதிர்பார்க்க வேண்டிய சூழ்நிலை உருவாவது இயல்புதான். (அந்த ஏற்றத்தாழ்வு இல்லையெனில் யாரும் பிறரைக் கண்டு கொள்ளவேமாட்டார்கள்) அந்த எதிர்பார்ப்பு நிறைவேறாத போது கால் வயிற்றுக் கஞ்சிக்கே வழியில்லாமல் திண்டாடுபவர்கள் ஆடம்பரமாய் வாழும் வசதியுள்ளோரைப் பார்த்து மனம் வெதும்புவதோடு அவர்களின் பொருளா தாரத்தைச் சூறையாடும் முடிவுக்கும் வந்து விடுகின்றனர். அதே நேரத்தில் ஓர் ஏழை, தமக்கு வழங்கியவனைக் கண்டால் நன்றியுணர்வுடன் நடந்துகொள்வதுடன் வசதியுள்ளோருக்கு எதிரான

வக்கிர புத்தியுள்ளவர்களின் நடவடிக்கைகளில் ஒரு போதும் பங்கேற்கவுமாட்டான்.

இங்கே ஏதோ யாசகத்தை இஸ்லாம் ஊக்கப்படுத்துவதுபோல யாரும் நினைக்கக் கூடாது. ஏழைகளுக்கு வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தியிருக்கும் இஸ்லாம் தகுதியில்லாமல் யாசிக்கக்கூடாது என்பதையும் தவறாமல் எடுத்துரைக்கின்றது. வழங்கக்கூடிய உயர்ந்த கை வாங்கக்கூடிய தாழ்ந்த கையை விடச் சிறந்தது என இறைத்தூதர் (ஸல்) நாகரிகமாகச் சுட்டிக் காட்டியுள்ளார்கள். யார் (தேவையின்றி) தனது பொருளாதாரத்தை அதிகப்படுத்துவதற்காகக் கையேந்தி யாசிக்கின்றானோ அவனை முகத்தில் சதைப் பற்றில்லாத எலும்புகளுடன் அல்லாஹ் மறுமையில் எழுப்புவான் என்று அன்னார் எச்சரித்துமுள்ளார்கள்.

ஒரு பக்கம் வாழ்வதும் மறுபக்கம் தேய்வதும் என்ற சீர்கேடு இல்லாமல் சரியான வழங்கலும் தகுதியான பெறுதலும் நடைபெற்று பொருளாதாரம் சிந்தாமல் சிதறாமல் முறையாக விநியோகிக்கப் படுமானால் சமூகத்தில் கொலை-கொள்ளைகள் வெகுவாகக் குறையும். எனவேதான் குறிப்பிட்ட அளவு பொருளாதாரம் வைத்திருப்பவர்கள் அதில் குறிப்பிட்ட அளவு கொடுக்க வேண்டும் என்று

இஸ்லாம் வகுத்திருக்கிறது. அது போலவே யார்யாருக்குக் கொடுக்க வேண்டும் அல்லது அதைப் பெறத் தகுதியுள்ளவர்கள் யாவர் என்ற பட்டியலையும் தொகுத்திருக்கிறது. அதாவது, "தேவையுள்ளவர்களுக்கும், ஏழைகளுக்கும், வரி வசூலிக்கும் அதிகாரிகளுக்கும், இஸ்லாத்தின்பால் அவர்களின் இதயங்கள் ஈர்க்கப்படுவதற்காகவும், அடிமைகளை விடுதலை செய்வதற்காகவும், கடனாளிகளுக்கும், அல்லாஹ்வின் பாதையில் அறப்போர் (புரிபவருக்கும்), வழிப்போக்கர்களுக்குமே பணவரி உரியது" (அல்குர்ஆன்: 9:60)

இந்தப் பொருளாதாரத் திட்டம் என்றைக்கு நிறைவேற்றப்படுகின்றதோ அதன் அடுத்தத் தலை முறையினருக்கு வறுமையை வரைந்துதான் காட்ட வேண்டியது வரும். "கொடி கொடுத்தீர், குண்டூசி தந்தீர். குத்துவதற்கு எங்கே சட்டை?" என்று கிராமத்து மாணவன் கேட்கமாட்டான்.

"கந்தையானாலும் கசக்கிக் கட்டு!" நல்ல தத்துவம்தான். அது காயும்வரை எதைக் கட்டிக் கொள்வதாம்? என்ற நியாயமான கேள்வி எழாது. "வீட்டுக்கு ஒரு மரம் நடு என்று கூறும் அரசாங்கமே! நானும் மரம் நடுகின்றேன். எனக்கும் ஒரு வீடு கொடு!" என்று பொதுமக்கள் வினவமாட்டார்கள்.

"கூழானாலும் குளித்துக் குடி! நல்ல உபதேசம்தான். இதோ குளித்துவிட்டேன், எங்கே கூழ்?" என்று குடியானவன் கேட்கமாட்டான்.

*நமக்குள்ளே: சிலர் ஜகாத்தை தர்மம் என்று தவறாகப் பொருள் கொள்கின்றனர். அதனால்தானோ என்னவோ பெரும்பாலான செல்வந்தர்கள் சரியாகக் கணக்குப் பார்த்து ஜகாத் வழங்குவதில்லை. இன்னும் சிலரோ நான் ஈட்டிய முதலீடு, நான் செய்த முயற்சி, எனது சொந்த திறமை. இவற்றில் விளைந்த எனது செல்வத்தில் நான் யாருக்கும் பங்கு கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதுகின்றனர். ஆனால் உண்மையில் நம்மிடம் சேர்ந்துள்ள பொருளாதாரம் நமக்கே நமக்கல்ல; அதில் நமக்கிருப்பது போலவே பலருக்கும் பங்குள்ளது. விகிதாச்சாரத்தில் வேண்டுமானால் கூடுதல்-குறைவிருக்கலாம். நாம் அந்தப் பொருளாதாரத்தின் விநியோகஸ்தர்களே அன்றி அதன் முழு உரிமையாளர்களல்லர் - என்ற சிந்தனையை ஏற்படுத்திக் கொண்டால் பக்குவம் பெறலாம்.*

## ஐந்தாவது கடமை ஹஜ்:

பரம்பரையால், மொழியால், நிறத்தால், இனத்தால், குலத்தால், வாழுகின்ற பகுதியால், தொழிலால், கலாச்சாரத்தால் இப்படிப் பலப்பல காரணங்களால் பிரிந்து கிடக்கும் மனிதர்களை உலகளாவிய அளவில் "அனைவரும் ஓரிறைவனுக்கு அடிமைகள்" என்ற சமத்துவக் கயிற்றால் பிணைத்து சர்வதேச ஒற்றுமைக்கு மாதிரி வடிவத்தை ஆண்டுக்கொருமுறை நடைமுறை சாத்தியமாக்கும்

அகில உலக மாநாடுதான் ஹஜ் என்னும் புனித யாத்திரை.

இஸ்லாமிய ஆண்டின் கடைசி மாதமாகிய துல்ஹஜ்ஜில் மேற்கொள்ள வேண்டிய இந்தக் கடமையில் ஆண்கள் தையலில்லாத (ஒரு மேலாடை, ஒரு கீழாடை என) இரு ஆடைகளை அணிய வேண்டும் என்று வலியுறுத்தப்படுவதன் மூலம் ஆடைக்கலாச்சார வேறுபாடு முற்றிலும் தவிர்க்கப்படுகின்றது. அத்துடன் ஆள்பாதி ஆடைபாதி என்ற வழக்கின் வெளிப்பாடான, வசதியானவன் - வறியவன் என்ற பாகுபாடும் களையப்படுகின்றது.

ஆண்கள் தலையை மறைக்கக்கூடாது என்ற சட்டத்தின் மூலம் அரசர்கள் கிரீடங்களை அணிந்து தங்களை வித்தியாசப்படுத்திக்கொள்ள முடிவதில்லை. தொப்பிகள் - குல்லாக்களில்கூட எத்தனையெத்தனை வித்தியாசங்கள்? அந்த வித்தியாசங்களும் இங்கு அறவே ஒழிக்கப்பட்டுவிடுகின்றன.

சிகை அலங்காரத்திற்கு மனிதன் செலவழிக்கும் பொருளாதாரம் மற்றும் பொன்னான நேரத்திற்கு அளவே இல்லை. ஹஜ்ஜின் இறுதியில் தலை முடியை மழிக்கவோ அல்லது குறைக்கவோ கட்டளையிடப்பட்டுள்ளதால் தலை அலங்காரத்தினால்

வரக்கூடிய குறைந்தபட்ச வேறுபாடும் தவிர்க்கப்பட்டுள்ளது.

பல்வேறுபட்ட பாஷைகளைத் தாய் மொழிகளாக ஏற்றுக் கொண்ட அனைவருமே ஒட்டு மொத்த முஸ்லிம்களின் வேதத்தின் மூலமொழியாகிய அரபி மொழியில் "லப்பைக் அல்லாஹும்ம லப்பைக்..." என ஒரே மொழியில் முழங்குவதனால் மொழிபேதம் எங்கோ ஓடி ஒளிந்துகொள்ளுமல்லவா?

மாட மாளிகைகளில், கூட கோபுரங்களில் வாழ்பவர்களும் அர.்.பா என்னும் மைதானத்திற்குள் சங்கமமாகும் போதும், கூடாரங்களில் குனிந்து நுழையும்போதும் செல்வச் செருக்கு முகவரியற்றுப் போகுமல்லவா?

ஹஜ்ஜின் முடிவில் ஆடு, மாடு, ஒட்டகம் ஆகியவற்றிலொன்றை அறுத்துப் பலியிடுவது - குர்பானி கொடுப்பது மார்க்கமாக ஆக்கப்பட்டுள்ளது.

'ஒருவன் தன்னைவிட வசதியில் தாழ்ந்தவனுக்குக் கொடுப்பது தர்மம். உயர்ந்தவனுக்குக் கொடுப்பதோ தானம்' எனப் பொருள் பிரிப்பாருண்டு. அந்த வகையில் தர்மம் செய்ய வேண்டியவர்களும் தானம் கொடுக்கப்பெற வேண்டியவர்களும் இன்று தர்மம் பெறுவதற்காக அலைகின்றார்களெனில் அது சராசரிக்கு

அப்பாற்பட்டது. குறுக்கு வழியில் பணம் சேர்க்க வேண்டும் என்ற கோணலான சமூக மதிப்பீடுகள் கொண்ட வக்கிர புத்தியுள்ளோரின் வாடிக்கை அது. அவர்களை நாம் கண்டுகொள்ளத் தேவையில்லை.

ஆனால் யதார்த்தத்தில் தானம் பெறுபவர்கள் கிடைப்பதரிது. கொடுத்தே பழக்கப்பட்டவர்கள் வாங்குவதற்கு எப்படித் தயாராவார்கள்? ஆனால் குர்பானியில் ஒருவருக்கொருவர் இறைச்சியைப் பரஸ்பரம் பரிமாறிக் கொள்வதால் தானமும் தர்மமும் ஓசையின்றி நிறைவேறும்.

இவ்வாறு கஃபாவை வலம் வருவது உட்பட ஹஜ்ஜின் பல காரியங்களுக்கு விஞ்ஞான – சரித்திரம் சார்ந்த - உளவியல் ரீதியான பல காரணங்களுமுண்டு. அவற்றை இங்கு விரிவஞ்சி விடுகின்றேன். இவை இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகளைப் பற்றிய சுருக்கமான விளக்கம். இதன் மூலம் இறைவனுக்காக மேற்கொள்ளப்படும் வழிபாடுகளில் தனி மனிதனுக்கும் சமூகத்திற்கும் கிடைக்கின்ற நன்மைகளைப் பற்றி விளக்குவதே நமது நோக்கம்.

இவைபோக, வணக்க - வழிபாடுகள் ஏற்படுத்தப்பட்டதன் நோக்கங்களைக் குர்ஆனின் மொழியிலேயே அறிந்துகொள்ள வேண்டுமெனில்

அதற்குச் சில உதாரணங்களைத் தரலாம்.

1. நிச்சயமாக தொழுகை மானக்கேடான, வெறுக்கத்தக்க (சேட்டை)காரியங்களிலிருந்து விலக்குகின்றது (29:45)

மனம் வளம் பெற தியானம், தீய சிந்தனைகளிலிருந்து விலக யோகாசனம் என்றெல்லாம் யோகா பயிற்சியாளர்கள் இன்றைக்கு விளம்பரம் செய்து பணம்பண்ணிக் கொண்டிருப்பதை அடிக்கடி பார்க்கின்றோம்; படிக்கின்றோம்; கேள்வியும் படுகின்றோம். தொழுகை யோகாக்களின் முன்னோடி என்பது யோகா பயிற்சியாளர்களும் ஒப்புக்கொள்ளும் உண்மையாகும்.

2. விசுவாசிகளே! உங்களுக்கு முன்னர் வாழ்ந்தவர்கள் மீது கடமையாக்கப்பட்டது போலவே உங்கள் மீதும் நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளது, நீங்கள் இறையச்சம் - பக்குவம் பெறுவதற்காக. (2:183)

உபவாசம் தரும் பக்குவங்களும் படிப்பினைகளும் மனிதர்களைப் பண்படுத்து வதற்காகத்தான் என்பதற்கு அது ஒரு பத்தியம் என்பதே போதுமான சான்று.

ஆனால் மாற்று மதங்களில் இறைவழிபாடுகள்

என்ற பெயரில் புரோகிதத்திற்கும் சுரண்டலுக்கும் வழி வகுக்கும் எத்தனையெத்தனை வழிமுறைகள் இன்று உருவாக்கப்பட்டுள்ளன; ஆச்சாரங்களின் பட்டியலில் அனாச்சாரங்களும் அபச்சாரங்களும் அநேகமாக இடம் பிடித்திருப்பதைக் காணலாம்.

**வெளிப்படையைக் கொண்டுதான் முடிவெடுக்க வேண்டும்**

பொது விவகாரங்களில் அந்தரங்கம், வெளிப்படை என்று கூறி எதார்த்தத்தைப் போட்டு சிலர் குழப்பிக்கொள்வர் சிலர் அருள்வாக்கு கூறுவதாகப் பிதற்றிக்கொண்டு எதையாவது உளறுவர். அது எல்லோருக்கும் தெரியும். ஆனாலும் "அவனது கூற்றில் வெளிப்படையாக பிழைகள் தென்பட்டாலும் அதன் உள்ளார்ந்த கருத்தை நோக்கும்போது..." எனச் சிலர் சப்பைக் கட்டுவார்கள்.

எதுவும் சந்திக்கு வந்துவிட்டால் அதில் ஒளிவுமறைவு இருக்கக்கூடாது. ஜாடை-மாடைகள், சிலேடைகள் எல்லாம் இலக்கிய இரசனையோடு நிறுத்திக் கொள்ளப்பட வேண்டும். முடிவுகளைத் தீர்மானித்தல், சட்டங்களைப் பிறப்பித்தல், அவற்றிற்குச் செயல் வடிவம் கொடுத்தல் போன்ற தீர்க்கமான விவகாரங்களில் வெளிப்படையை மட்டுமே பிரதான அடிப்படையாகக் கொள்ள வேண்டும். இல்லையெனில் நிரபராதிகள்

குற்றவாளிகளாக ஆக்கப்படுவதும் நியாயங்கள் காயப்படுத்தப்படுவதும் அநியாயங்கள் அரசோற்றுவதும் சர்வசாதாரணமாகிவிடும். அந்தரங்கங்களை ஆராய்வதும் மனித சக்திக்குட்பட்டதல்ல. ஒரு மனிதனுடைய அந்தரங்கத்தை இன்னொரு மனிதன் துல்லியமாகத் தீர்மானிக்க இயலுமாயின் அதை அந்தரங்கமென எங்ஙனம் கூற இயலும்?

தமக்கு வேண்டிய நபர்களிடமிருந்து வெளிப்படும் பாதகங்களுக்கு உள்ளர்த்தங்களைத் தோண்டியெடுத்து அவற்றை நியாயப்படுத்துவதும் வேண்டாதவர்களின் உயர் தொண்டுகளுக்குக் கூட உள்நோக்கங்கள் கற்பித்து அவற்றைக் கொச்சைப் படுத்துவதும் காலங்காலமாக நடந்துவரும் கயமைத் தனங்கள். இந்த விஷயத்திற்கும் "உள்ளங்களில் உள்ளவற்றை இறைவனே அறிவான்" எனும் குர்ஆனின் கூற்று மூலம் இஸ்லாம் முற்றுப்புள்ளி வைக்கிறது.

எதற்கும் அந்தரங்கம் கற்பிப்பதன் விபரீதம் யாதெனில் கொலை, கொள்ளை, வாக்கு மீறுதல், கற்பழித்தல் போன்றவற்றிற்குக்கூட சிலர் அந்தரங்கக் காரணங்கள் கற்பித்துத் தப்பிக்கப் பார்க்கிறார்கள். இவற்றிற்குப் புராண - இதிகாசங்களில் ஏராளமான சான்றுகளைப் பார்க்கலாம்.

நல்ல காரணம் மற்றும் நன்மையான

காரியங்களுக்காக பொய் சொல்லலாம் என்றும் சிலர் தத்துவம் பேசுவர். பொய்யென்ன, போரே செய்பவன்கூட அதற்குத் தன் பக்கத்து நியாயம் கற்பிப்பானே! பொய் சொல்ல முன்வந்து விட்ட ஒருவனுக்கு அது நன்மைக்காகவே தான் சொல்லப்பட்டது என்றுப் புனைந்துரைப்பதற்கு என்ன, சொல்லியா கொடுக்க வேண்டும்?

அதனால்தான் தவிர்க்க இயலாத மூன்று சந்தர்ப்பங்களைக் குறிப்பிட்டு அவற்றில் மாத்திரம் பொய்யை அனுமதிக்கிறது இஸ்லாம்: கணவன் - மனைவி பரஸ்பரம் ஒருவரையொருவர் பாராட்டி மகிழ்வித்தல், போர்முனை, பிரிந்துவிட்ட இரு சாராரை இணைத்தல். (முஸ்லிம்)

அது போலவே தவறு யாரிலிருந்து வெளிப்பட்டாலும் அதைத் தவறாகவே கருதச் சொல்கிறது இஸ்லாம்: சால்ஜாப்புகளுக்கு இதில் இடமளிக்கவில்லை.

இப்ராஹீம் (அலை) என்றொரு இறைத்தூதர். அந்தத் தனி மனிதரைக் குர்ஆன் ஒரு சமுதாயம் என்றே வருணிக்கிறது. அவரைப் பற்றி முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் கூறும்போது, அவர் தமது வாழ்க்கையில் மூன்று பொய்கள் மட்டும் கூறியுள்ளார் எனக் குறிப்பிட்டார்கள். அந்த மூன்று

பொய்களும் எப்படிப்பட்ட கட்டங்களில் கூறப்பட்டவை என்பதை நோட்டமிட்டால் அவற்றைப் பொய் என்று நமது வழக்கில் கூறவேமாட்டோம். ஆனாலும் அவற்றை நபி(ஸல்) பொய்களென சுட்டிக்காட்டத் தவறவில்லை.

மிக்தாத் பின் அஸ்வத் (ரழி) என்றொரு நபித்தோழர் இறைத்தூதரிடம் வந்து, "இறைத்தூதரே! இறை நிராகரிப்பாளர்களில் ஒருவன் என்னிடம் சண்டையிடும்போது எனது ஒரு கையை வெட்டித் துண்டாக்கிவிட்டு ஒரு மரத்திற்குப் பின்னால் மறைந்து கொள்கின்றான். அப்போது, இஸ்லாத்தின் ஏகத்துவ (கலிமா) வாக்குமூலத்தை மொழிந்து "இதோ நான் முஸ்லிமாக ஆகிவிட்டேன்!" என்றும் கூறுகின்றான். இவ்வாறு சொன்ன பிறகு நான் அவனைக் கொலை செய்யலாமா?" என்று கேட்கிறார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "அவரைக் கொல்லக் கூடாது!" என்றார்கள். அதற்கவர், "இறைத்தூதரே! அவர் எனது கையை வெட்டித் துண்டாக்கி விட்டாரே!" எனக் கேட்ட போது, "நீர் இப்போது அவரைக் கொலை செய்தால், நீர் அவரைக் கொல்வதற்கு முன்னால் நீர் இருந்த அந்தஸ்த்தில் அவரும், அவர் கலிமா (வாக்குமூலம் - உறுதிமொழி) சொல்வதற்கு முன்னால் இருந்த நிலையில் நீரும் ஆக வேண்டியது வரும்!"

என்பதாக நபி (ஸல்) கூறினார்கள். (நூல்: முஸ்லிம்)

இதே போல் இன்னொரு நிகழ்ச்சி. உஸாமா பின் ஸைத் (ரழி) என்ற நபித்தோழர் அறிவிக்கிறார்: ஒரு போரில் என்னிடம் ஓர் எதிரி மாட்டிக் கொண்டான். அப்போது அவன் 'லாயிலாஹ இல்லல்லாஹ்' - வணக்கத்திற்குத் தகுதியானவன் உண்மையில் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை - என்று (கூறி முஸ்லிமாகிவிட்டதாகக்) கூறினான். அதற்குப் பிறகும் நான் அவனைத் தாக்கிவிட்டேன். அது எனக்கு நெருடலாகவே இருந்ததால் இறைத் தூதரிடம் அது பற்றி நான் வினவியபோது அதற்கவர்கள், 'அவன் லாயிலாஹ இல்லல்லாஹ் என்ற வாக்குமூலம் கூறிய பின்புமா கொலை செய்தீர்?' எனக் கேட்டார்கள். 'இறைத் தூதரே! எனது ஆயுதத்தைக் கண்டு பயந்துதான் அவன் கலிமா சொன்னான்' என நான் கூறியபோது, "நீர் அவனது உள்ளத்தைப் பிளந்து பார்த்தீரோ?" எனக் கேட்டார்கள். (நூல்: முஸ்லிம்)

எதையும் வெளிப்படையாகத்தான் அணுக வேண்டும். சம்பந்தப்பட்டவர்கள் ஒப்புக் கொள்ளாத வரை எதற்கும் மாற்று அர்த்தம் கற்பிக்க யாருக்கும் உரிமையில்லை.

பொது விவகாரங்களில் எந்த ஒளிவுமறைவும் இருக்கக்கூடாது. எதையும் வெளிப்படையாக

பரிமாறிக் கொண்டால் பாரபட்சம், ஏற்றத்தாழ்வு, அநீதி, அக்கிரமங்கள், சட்டமீறல் என எல்லா ஏமாற்று வித்தைகளும் அழிந்து போகும்.

கனவுகளையும் சுயமான சில கற்பனைகளையும் எங்கள் மத நம்பிக்கை என்று கூறி நீதி மன்றங்களையும் ஆக்கிரமிக்கும் மத வாதிகள் இஸ்லாத்தின் இந்தப் பண்பாடுகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

## குற்றவியல் சட்டங்கள்

திருடினால் கையை வெட்ட வேண்டும் திருமணமானவர் விபச்சாரம் செய்தால் கல்லெறிந்து கொல்ல வேண்டும், திருமணமாகாதவர் விபச்சாரம் செய்தால் நூறு கசையடிகள் கொடுக்க வேண்டும், அவதூறுக்கு எண்பது கசையடி கொடுக்க வேண்டும் இவையெல்லாம் குற்றவியல் சட்டங்கள். இன்றைக்கும் சர்ச்சைக்குள்ளாகும் சட்டங்கள் இவைதாம்.

திருடுவது ஒரு பெருங்குற்றமா? பல திருட்டுக்கள் செய்தவர்கள் எப்போதாவது பிடிபடுவதும் தண்டிக்கப்படுவதும் பிறகு விடுவிக்கப் படுவதும் நமது நாட்டில் பெரும்பாலும் நடக்கும் வேடிக்கையான வாடிக்கைகள். இதற்குப் போய் இவ்வளவு பெரிய தண்டனையா? இது காட்டு

மிராண்டித்தனம் என்று பலர் அலறுகின்றனர்.

இங்கே ஒரு முக்கியமான விஷயத்தைக் கருத்தில்கொள்ள வேண்டும். இஸ்லாம் திருடர்களின் கைகளை வெட்டுங்கள்! என்று போகிற போக்கில் அள்ளித் தெளிக்கவில்லை. மாறாக ஒரு மனிதன் திருடாமலிருப்பதற்குத் தேவையான வழிகளை யெல்லாம் வகைப்படுத்திவிட்டுத் தான் இந்தச் சட்டத்தை அமுல்படுத்தச் சொல்கிறது. வேறு வகையில் சொல்வதாக இருந்தால், உழைக்கும் கரங்களை இஸ்லாம் பாராட்டுகிறது; உதவும் கரங்களை வரவேற்கிறது; உழைக்கவோ உதவவோ இயாலாத நிலையிலுள்ள யாசிக்கும் கரங்களை அனுமதிக்கிறது. பஞ்சம் தலைவிரித்தாடும் போது இந்தத் தண்டனை நிறைவேற்றப்படக் கூடாது என்ற இஸ்லாமிய ஆட்சியாளர்களின் சமயோசித சட்டமும் இங்குக் கவனிக்கத்தக்கது) திருடாமலிருப்பதற்கான தீர்வுகளான இந்த மூன்று வகைகளையும் தாண்டி அடுத்தவனுடைய அனுமதியின்றி அடுத்தவனின் உடமைகளில் கை வைக்கப்படுவதைத் தான் இஸ்லாம் எதிர்க்கிறது; அந்தக் கை இருக்கக் கூடாது என்று சட்டம் விதிக்கிறது; அதை வெட்டச் சொல்கிறது.

இந்தச் சட்டம் அமுலுக்கு வந்தால் பல பேருக்குக் கையில்லாமல் போகுமே என்கிற அச்சம்

பாமரத்தனமானது. ஏனெனில் பலபேர் முன்னிலையில் ஒரேயொரு திருடனின் கை வெட்டப்(பட்டு அதுவும் இன்றைய காலகட்டத்தில் ஒளி-ஒலி பரப்பப்) படுமானால் நாட்டிலுள்ள எந்த மனிதனுக்காவது திருடுவதற்குத் தைரியம் வருமா?

இந்தக் (CRIMINAL) குற்றவியல் சட்டங்கள் முறையாக ஒன்றிரண்டு நிறைவேற்றப்பட்டாலும் போதும் (CIVIL) உரிமையியல் வழக்குகளுக்கு வேலையே இருக்காது. ஆமாம், 'நிதி' மன்றங்கள் சீர்படுத்தப்பட்டால் நீதி மன்றங்களின் வேலை(ள)ப் பளு வெகுவாகக் குறையும். இனி விபச்சாரச் சட்டத்திற்கு வருவோம்.

உயிரினங்கள் அத்தனையிலும் இருபால்கள் உள்ளன. இரு பாலரும் தத்தம் உணர்வுகளைப் பகிர்ந்துகொள்ளுதல் என்பது தவிர்க்க இயலாத இயல்பு. அதன் வெளிப்பாடாகத்தான், ஒரே மனிதத் தம்பதிக்குப் பிறந்த மக்கள், இன்றைக்குப் பல குலங்களாக, கோத்திரங்களாக பல்கிப் பெருகியுள்ளனர். ஆண்-பெண் காம இச்சையை, பாலுணர்வு வேட்கையைத் தணித்துக் கொள்ள இஸ்லாம் திருமணத்தை அனுமதிக்கின்றது. இல்லையில்லை அதை வலியுறுத்தவே செய்கின்றது. ஓர் ஆண், ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை, அதிக பட்சமாக நான்கு பெண்களை ஏகக் காலத்தில்

மணமுடித்துக் கொள்ளலாம்; தம்பதியரிடையே சில உரிமைகளும் கடமைகளும் உள்ளன என்றெல்லாம் பல வரையறைகளை இஸ்லாம் விதிக்கிறது. அதன் மூலம் பாலுணர்வுக்கு வடிகாலை ஏற்படுத்துவதுடன் அதன் பெயரால் நடக்கும் காமக் களியாட்டங்களைத் தவிர்க்கிறது.

ஒருவனுக்கு ஒருத்தி என்கிற தத்துவமெல்லாம் மேடை அதிர, வாய் கிழியப் பேசி போதுமான அளவுக்குப் புளித்துப்போய்விட்டது. புராணங்களிலும் சரி (தசரத மன்னனுக்கு - அவர்தாம் ராமனின் தந்தை - அறுபதாயிரம் மனைவிகள், முருகனுக்கு வள்ளி, தெய்வானை என்று இருவர்) புழக்கத்திலும் சரி (இன்றைய அரசியல் வாதிகள்) இந்தத் தத்துவம் காலம் கடந்து விட்டது. அதில் கொடுமை என்னவெனில் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகளிடம்(?) கொஞ்சி மகிழும் இவர்கள் சட்டப்படி அந்த மனைவிகளுக்கோ அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கோ சொத்துரிமை கொடுக்காததுதான். இங்குதான் இஸ்லாத்தின் தூர நோக்கு பிரகாசிக்கிறது. அது, அந்த மனைவிகளையும் சட்டப் பூர்வமாக அங்கீகரித்து சகல உரிமைகளையும் வழங்குகிறது. இவ்வாறு ஆண்களும் பெண்களும் தங்களின் கற்பைப் பாதுகாத்துக் கொள்வதற்கான சூழ் நிலையையும் வகுத்துத் தருகின்றது இஸ்லாம்.

இதுபோக மக்களின் காம இச்சையைத் தட்டி எழுப்பக்கூடிய அனைத்து வாசல்களையும் இஸ்லாம் முழுமையாக அடைக்கிறது. ஆண்களும் பெண்களும் தங்களின் அந்தரங்கக் கவர்ச்சிகளையோ கண பரிமாணங்களையோ வெளிப்படுத்தும் விதமாக அரை குறை ஆடைகளை அணியக் கூடாது (பெண்களுக்கு அவர்களின் உடற்கூறுகளை அனுசரித்து பிரத்தியேகமான பர்தா முறை), ஆணும் பெண்ணும் தங்களின் பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும், ஓர் ஆண், அந்நிய பெண்ணுடன் தனித்திருக்கக்கூடாது, ஒரு பெண் தனிமையில் நீண்ட பயணம் மேற்கொள்ளக் கூடாது, ஆண்களும் பெண்களும் கலக்கக்கூடாது, உருவப்படங்கள் வரையக்கூடாது, அசிங்கமான வார்த்தைகளை உதிர்க்கக்கூடாது, காதலின் பெயரால் காம லீலைகளை அரங்கேற்றக் கூடாது, கணவன்-மனைவி தங்களிடையே நடக்கும் அந்தரங்க இரகசியங்களைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளக் கூடாது என்றெல்லாம் ஆபாசத்தின் அத்தனை கிளைகளையும் முறித்து விடுகிறது இஸ்லாம்.

இது மட்டுமல்லாது வரதட்சணை ஒழிப்பு, விதவைத் திருமணம், பலதாரமணம், திருமணச் சடங்கு-சம்பிரதாயங்களுக்குச் சாவுமணி அடித்தல் ஆகிய திட்டங்களால் இஸ்லாம் திருமணத்தை

மிகவும் எளிமைப்படுத்துகிறது. ஏனெனில் எந்தச் சமூகத்தில் திருமணம் சிரமமாகி விடுகின்றதோ அந்தச் சமூகத்தில் விபச்சாரம் பெருகும் என்பது நிரூபணமான உண்மை.

இவ்வாறு ஒரு பக்கம் சராசரி மனிதன் தனது காம வேட்கையைத் தணித்துக்கொள்ள ஏராளமான வடிகால்களை அமைத்துக் கொடுத்துவிட்டு மறுபுறம் அவனது இச்சை கொச்சைப்படுத்தப்படாமலிருக்க தாராளமான அரண்களையும் ஏற்படுத்திய பிறகும் ஒருவன் பிறன்மனை நோக்கினால் - அவனை என்ன செய்வது? இப்படிப்பட்ட கயவனால் சமூகத்திற்கு என்ன இலாபம்? இவன் திருமணமாகாதவனாக இருந்தால், அந்தப்புரத்தைச் சுவைக்காதவன் பாவம், திருந்தட்டும்! என்று கருதி நூறு கசையடிகளுடன் விட்டுவிடலாம். திருமணமான பிறகும் பதி தாண்டுபவளையோ அல்லது படி தாண்டுபவனையோ விட்டுவைக்கலாமா? அவ்வாறு விட்டுவைக்கப் போய்த்தானே கற்பழிப்புக் குற்றங்கள் நாளுக்கு நாள் மலிவதும் வேலியே பயிரை மேயும் அவலங்கள் நிகழ்வதும் ஆன்மீக ஆசிரமங்கள் அந்தப்புரங்களாக மாறும் அக்கிரமங்கள் தொடர்வதும் அன்றாடச் செய்திகளாகிவிட்டன. அப்படியானால் அவன் கல்லால் எறிந்து கொல்லப் படுவதில் என்ன அநியாயம் வேண்டிக் கிடக்கின்றது?

என்னதான் இருந்தாலும் ஓர் உயிரைக் கொல்வதா? என்று சிலர் வக்காலத்து வாங்குகின்றனர். இவர்கள், கற்பு சூறையாடப்பட்டு உயிரிருந்தும் நடைப்பிணமாக சுற்றித் திரியும் அபலைப் பெண்களுக்கு என்ன பரிகாரம் கூறுவார்கள்?

கல்லெறிந்து கொல்வது என்கிற உயிரைப் பறிக்கும் இந்தச் சட்டம் 'எடுத்தேன், கவிழ்த்தேன்' என்று நிறைவேற்றப்படுகின்ற ஒன்றல்ல. இந்தக் குற்றத்தைப் புரிந்தவர் சுயமாகவே நீதி மன்றத்தில் வந்து தம்மை ஒப்புவிக்க வேண்டும். (இது அசாத்தியமான ஒன்றாகத் தோன்றுகிறதல்லவா? குற்றத்தைச் செய்த ஒருவன் அதற்கான தண்டனை கொலைதான் என்று தெரிந்துகொண்டே நீதி மன்றத்தில் அவன் சரணடைவானா? என்று நாம் நினைக்கலாம். அனால் அவ்வாறு சரணடைந்தவர்கள் வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளனர். ஆயினும் அது சராசரிக்கு அப்பாற்பட்ட ஒரு நிலைதான்). அல்லது அவன் குற்றம் புரிவதை நேரில் பார்த்த நான்கு நபர்களின் சாட்சியம் வேண்டும். நான்கு பேரை வைத்துக்கொண்டு யாரேனும் விபச்சாரம் புரிவாரோ? அப்படியானால் இந்தத் தண்டனை நிறைவேற்றப் பெறுவது மிகவும் அரிது என்று விளங்குகிறதல்லவா?

இந்தச் சூழ்நிலையில் இந்தக் குற்றவியல் தண்டனை வெறும் ஏட்டில்தானா? நடைமுறைக்குச் சாத்தியமில்லையா? என்று யாரும் நினைத்துவிடக் கூடாது. எவனாவது வேண்டுமென்றே தனக்கு வேண்டாதவன் மீது விபச்சாரக் குற்றத்தைச் சுமத்திவிட்டால் ஓர் உயிரல்லவா பறிக்கப்பட்டுவிடும். எனவேதான் ஒன்றல்ல இரண்டல்ல, நான்கு சாட்சிகள் தேவைப்படுகின்றன. நான்கு பேரும் சேர்ந்து ஒருமித்து பொய் கூறமாட்டார்கள் என்கிற அழுத்தமான நம்பிக்கையும், ஒரு குற்றவாளி தப்பித்தாலும் பரவாயில்லை, ஒரு நிரபராதி தண்டிக்கப்படக்கூடாது என்கிற எதிர்பார்ப்பும்தான் அதற்குக் காரணம்.

இந்த அடிப்படையில்தான் யாரும் வெறுமனே குற்றம் சுமத்தப்பட்டு அவனுடைய கண்ணியத்திற்கும் கவுரவத்திற்கும் இழுக்கு வந்துவிடக் கூடாது என்பதற்காக சாட்சிகளை இஸ்லாம் ஆதாரப் படுத்துகின்றது; அந்த வகையில் சாட்சியம் முறையாக அமையவில்லை எனில் சாட்சிகளை அவதூறு குற்றத்திற்கு ஆளாக்கி எண்பது கசையடிகள் கொடுக்க வேண்டும் என்றும் சட்டம் பிறப்பித்திருக்கிறது.

ஆக, நாலு பேர் முன்னிலையில் பகிரங்கமாக குற்றம் புரிபவர்கள் பயங்கரவாதிகள்; அவர்களால்

இந்தச் சமூகம் அடையும் தீமைகள் ஏராளம், அதனால் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியது கட்டாயம் என்கிற இஸ்லாத்தின் தூர நோக்கும் இங்கே வெளிப்படுகின்றது.

எனவே இஸ்லாத்தின் குற்றவியல் சட்டங்கள் காட்டுமிராண்டித்தனமானவை எனக் கருதுவோருக்கு நான் சொல்வது இதுதான்: காட்டுமிராண்டித்தனமான குற்றங்களைப் புரியும் கயவர்களுக்கு அந்த மாதிரியான தண்டனைகள் தான் பொருத்தம். ஏனெனில் கற்பழிப்புக் குற்றங்கள் அங்கிங்கெனாத படி எங்கும் நிகழ்வதால் இந்தியா உட்பட நாகரிகம் சரிந்து கொண்டிருக்கும் மேலை நாடுகளிலும் உள்ள மாதர் சங்கங்களெல்லாம் கற்பழிப்புக் குற்றங்களுக்குக் கடுமையான சட்டம் வேண்டும் என்று குரலெழுப்ப ஆரம்பித்துவிட்டனர். இந்திய அரசாங்கம் கூட பாலியல் குற்றங்களுக்கு மரண தண்டனை விதிக்க வேண்டுமென்று யோசிக்க ஆரம்பித்து விட்டதாக தகவல்கள் தற்போது வெளியாகிக் கொண்டிருக்கின்றன. அநேகமாக இந்நூல் வெளியாகும்போது சட்டம் அமுலாக்கப்பட்டு விடலாம். முஸ்லிமல்லாத மற்றவர்களும் கூட இஸ்லாமிய குற்றவியல் சட்டங்களை வரவேற்கின்றனர் என்பதற்கு ஒரு சோற்றுப் பதம் இதோ:

நீங்கள் இறந்த பிறகு உங்கள் கல்லறையில் என்ன எழுதப்பட வேண்டும் என்று விரும்புகிறீர்கள்? என்று பிரபல கவிஞர் முத்து லிங்கத்திடம் கேட்கப்பட்டதற்கு அவரின் பதில்:

கடவுளின் பெயரைச் சொல்லி கயமைகள் செய்வோர் தம்மைக்
கடலிலே அமிழ்த்திக் கொல்லக் காலமும் வருதல் வேண்டும்.
பொதுப்பணம் தனைச் சுருட்டும் போக்கிரிக் கூட்டம் தன்னைக்
கொதிக்கின்ற எண்ணெய் ஊற்றிக் கொல்லவும் சட்டம் வேண்டும்.
திருடினால் கையை வெட்டும் சிறப்பான நல்லச் சட்டம்
அரேபியா போல இங்கும் அவசியம் வேண்டும் வேண்டும்.
அரசியல் தலைவர், தொண்டர், அதிகாரி தவறு செய்தால்
தர்மத்தைக் காப்போர் கூடி சாட்டையால் அடித்தல் வேண்டும்.
கற்பழிக்கின்ற போலீஸ் கயவர்கள் சிரத்தைக் கொன்று
நற்புத்தி புகட்டும் வண்ணம் நட்டுவைத்திடவும் வேண்டும்....

*(நன்றி: தினமணி கதிர்: 5 பிப்ரவரி 1995)*

இது ஒரு தனி மனிதனின் விருப்பம் என்றாலும் சமூக பிரக்ஞையுள்ளவனின் சமுதாயத்தைப் பற்றிய பன்முகப் பார்வையின் வெளிப்பாடு என்பதை நாம் ஏற்றுத்தான் ஆக வேண்டும். எனவே, காட்டுமிராண்டிகளுக்கு வக்காலத்து வாங்குவதை விட்டுவிட்டு கட்டுப்பாடும் கண்ணியமும் காக்கப்படுவதற்காகக் குரல் கொடுங்கள்!

பயிர்களிலுள்ள களைகளை அகற்றுங்கள்; வேலிகள் உஷாராகிக் கொள்ளும். ஒரேயொரு குற்றவாளியைத் தண்டியுங்கள்; அதனால் ஓராயிரம் குற்ற உணர்வு கொண்டவர்கள் திருந்தக் கூடும்.

சட்டத்தால் பாதிக்கப்படுபவனின் நிலையை விட அவனது குற்றத்தால் பாதிக்கப்படுபவர்களின்

நிலையைக் கருத்தில் கொள்ளுங்கள்! அப்போதுதான் இஸ்லாத்தின் தெளிவான தூர நோக்கு புரியும்.

**சக்திக்கு அப்பாற்பட்ட சட்டத் திணித்தல் இல்லை**

மதத்தின் பெயரால் சமூகத்தில் திணிக்கப் பட்டுள்ள சட்டங்கள் ஏராளம். அதில் குறிப்பாக திருமணச் சட்டங்களைக் கூறலாம். திருமண வாழ்க்கை ஒரு சிற்றின்பம். அதை விடுத்து துறவு - சந்நியாசம் மேற்கொள்வதே அறம், விவாகரத்து கூடாது, மறுமணம் கூடாது, பலதார மணத்திற்கு அனுமதியில்லை இவ்வாறு அனுஷ்டிக்க இயலாத பல்வேறு வகையான சட்டங்கள் மக்களிடம் திணிக்கப்படுவதால் அவற்றைச் செயல்படுத்த இயலாமற் போய் சட்டங்களில் ஓட்டை-உடைசல்களை ஏற்படுத்த பலர் முனைவதைப் பார்க்கலாம்.

சட்டப்பூர்வமாக திருமணம் செய்ய இயலாதவர்கள் அச்சட்டங்களை மீறுவதையும் வேலி தாண்டுவதையும் சட்டத்தில் விரிசல்களை ஏற்படுத்துவதையும் பார்க்கின்றோம். இது போலவே புலால் உண்ணாமை என்கிற சட்டம். இது பனிபடர்ந்த பகுதிகளில் சாத்தியமாகுமா? அண்டார்டிக் போன்ற கடல் பிரதேசப் பகுதிகளில் காய்கறிகளுக்கு எங்கே போவது?

ஜீவ காருண்யம் என்ற தத்துவம்

யாருக்காவது சாத்தியமாகுமா? சுத்த சைவர்கள் நம்பியிருக்கும் விவசாயங்களில் விதைகளுக்கும் உரங்களுக்கும் ஆகும் செலவினத்திற்கு சற்றும் குறையாமல் பூச்சிக் கொல்லி மருந்துகளுக்கும் செலவிடப்படுகின்றதே! இங்கு புழுப்பூச்சிகளுக்காக ஜீவகாருண்யம் பேசினால் பழுத்த விவசாயிகளின் வாழ்க்கை என்னாகும்? அவர்கள் சேற்றில் கால் வைத்தால்தானே நாம் சோற்றில் கை வைக்க முடியும்! இனி அந்த ஜீவன்களுக்காக யார் காருண்யம் பேசுவது? தொல்லை தரும் கொசுக்கள், மலேரியா போன்ற வியாதிகளைப் பரப்பும் பாக்டீரியா - வைரஸ்கள் முதலான இலட்சோபலட்சக் கிருமிகளை அன்றாடம் அழித்தொழிக்கும் நிலை மட்டும் இல்லையெனில் நாம் சுகாதாரக் கேட்டிற்கு ஆளாக வேண்டியது வராதா?

பசு வதைத் தடைச்சட்டம் பற்றி வாய் கிழிய பேசுபவர்கள் பால், மோர், தயிர், வெண்ணெய், நெய் ஆகியவற்றில் சிலவற்றையோ அல்லது பலவற்றையோ தமது அன்றாட உணவுகளில் தவிர்ப்பதோ தவிர்க்க முடிவதோ இல்லையே! அது எப்படி?

பட்டாடைகளால் பரிவட்டம் கட்டுபவர்களுக்குப் பட்டுப் புழுக்களின் வாழ்க்கை அழிவதைப் பற்றிய கவலையில்லை. தேனீயைக் கொன்று தேனெடுத்து

அபிசேகம் செய்பவர்கள் தேனீக்காக பரிந்து பேசுவதில்லை. மனிதர்களில் ஜாதி பேதம் பார்ப்பவர்களுக்கு மற்ற பிராணிகளிலும் அதே கண்ணோட்டம் வெளிப்படுகின்றது. அதனால்தானே பசுவும் எருமையும் பால்தான் தருகின்றன என்றாலும் பசுவை கோமாதா என்று போற்றுபவர்கள், எருமையை எமன் வாகனம் என்று தூற்றுகின்றனர்.

எனவேதான் இஸ்லாம் மனிதனின் உடற்கூறுகள், மனோ இயல்புகள், காலச் சூழ்நிலைகள், தட்ப-வெப்ப நிலைகள், வாழும் பகுதிகள் அனைத்திற்கும் பொருத்தமான சட்டங்களை வகுத்தளித்துள்ளது.

"அல்லாஹ் எந்த ஆத்மாவையும் அதன் சக்திக்கு மீறி சிரமப்படுத்துவதில்லை" என அல்குர்ஆன் (2:286) கூறுவதைக் கவனியுங்கள்!

## மனித நேயத்தின் முன்வடிவம்

புலால் உண்பதை இஸ்லாம் அனுமதிப்பதால் இஸ்லாம் ஜீவ காருண்யத்திற்கு எதிரானது என்று யாரும் எண்ணிவிடக் கூடாது.

ஒருவர் ஒரு பறவையைப் பிடித்து கட்டிப் போட்டு அதை இலக்காக வைத்து அம்பெறிந்து விளையாடிக்கொண்டிருந்தார். அதைக் கண்ட நபி (ஸல்) அவர்கள் அவரைக் கண்டித்துவிட்டு

'ஜீவராசியைப் பயனற்ற வழியில் வதைப்பது கூடாது' எனக் கூறியுள்ளார்கள். (முஸ்லிம்)

ஒரு பெண் ஒரு பூனையை வளர்த்தாள். அதற்குத் தீனி கொடுக்காமல் சுயமாக தனது இறையைத் தேடவும் விடாமல் அதைக் கட்டிப் போட்டிருந்தாள். அது தாகத்தால் செத்துப்போனது எனவே அதற்குக் காரணமான அந்தப் பெண் நரகத்திற்குரியவளாக ஆக நேரிட்டது என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரீ, முஸ்லிம்)

ஒரு விபச்சாரி தாகத்தால் சிரமப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு நாயைக் கண்டாள். உடனே அருகிலுள்ள கிணற்றிலிருந்து தனது காலணியில் நீரை அள்ளி அதற்குக் கொடுத்து அதன் தாகத்தைத் தீர்த்ததாள். அதன் காரணமாக அவளது விபச்சாரக் குற்றம் மன்னிக்கப்பட்டு அவள் சொர்க்க வாசியாக ஆக்கப்பட்டாள் என்ற தகவலை நபி (ஸல்) அவர்கள் குறிப்பிடுகிறார்கள். (முஸ்லிம்)

இவை போன்ற தகவல்கள் ஒன்றிரண்டல்ல; ஏராளமாகக் காணக் கிடைக்கின்றன. மனிதனல்லாத ஜீவராசிகளின் விஷயத்திலேயே இவ்வளவு அக்கறை காட்டும் இஸ்லாத்தின் மனித நேயத்திற்கு தனியாக வேறு சான்றுகள் தேவையில்லை. என்றாலும் சில சான்றுகளைத் தரலாம்.

போர் முனைக்கு வந்துவிட்டால் எதிரிகளின்

உயிர்களைப் பறித்து உடமைகளைச் சீரழிப்பது நியாயம்தான் என்பதில் யாரும் சராசரியாக கருத்து வேறுபாடு கொள்வதில்லை. எதிரிகளை எப்படி இல்லாமலாக்குவது என்பதில்தான் அவரவரும் கவனமாக இருப்பர். ஐ.நா சபைகளோ மனித உரிமைக் கழகங்களோ, சர்வதேச நீதிமன்றங்களோ இல்லாத அந்தக் காலத்தில் இஸ்லாம் கூறும் போர் மரபைப் பாருங்கள்:

எதிரிகளின் பசுமையான சொத்துகளை அழிக்கக் கூடாது. அவர்களின் வணக்கஸ்தலங்களை இடிக்கக் கூடாது. அவர்களின் பெண்களையோ குழந்தைகளையோ கொல்லக் கூடாது. போரில் சம்பந்தப்படாத அவர்களின் முனிவர்களைத் தாக்கக் கூடாது. போரில் கொல்லப்பட்டவர்களின் உடல்களைச் சின்னாபின்னப்படுத்தக் கூடாது. இப்படி சண்டையிடும்போதும் சாத்வீகத்தைச் சொல்லும் மார்க்கம் இஸ்லாம்.

தீவிரவாதத்தோடு இஸ்லாத்தைத் தொடர்பு படுத்துபவர்கள் அறிந்துகொள்ள வேண்டிய இன்னொரு தகவலைப் பாருங்கள்:

நீங்கள் எதிரிகளை(ப் போர்க்களத்தில்) சந்திக்க வேண்டும் என்று விரும்பாதீர்கள்! மாறாக இறைவனிடம் ஆரோக்கியத்தைக் கோருங்கள்!

என்பது நபிமொழி. (புகாரீ) அதாவது போர்க்களம் சென்றால் அதனால் உங்களது உடலின் ஆரோக்கியமும் கெடும். எனவே சண்டையை - பகைமையை - போராட்டத்தை விரும்பாதீர்கள்! என்று அறிவுறுத்துகிறார்கள் நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள்.

ஒரு நாட்டுத்தலைவன், ஒரு தளபதியைப் போருக்கு அனுப்பும்போது பல முக்கிய உபதேசங்களைச் சொல்வான். குறிப்பாக, கடுமையாகப் போராட வேண்டும், எதிரிகளைக் கொன்று குவிக்க வேண்டும். புறமுதுகு காட்டி ஓடக் கூடாது என்பது போன்ற கட்டளைகளைப் பிறப்பிப்பான். ஆனால் முஹம்மத் நபியவர்கள், அலீ பின் அபீதாலிப் என்ற தளபதியை 'கைபர்' என்ற போர்க்களத்திற்கு அனுப்பும்போது கூறிய உபதேசம் என்ன தெரியுமா? 'எதிரிகளை இஸ்லாத்தின் பால் அழைப்பீராக! அவர்கள் மீதுள்ள பொறுப்புகளை எடுத்துரைப்பீராக! அல்லாஹ்வின் மீது ஆணையாக! உம் மூலமாக அல்லாஹ் ஒருவனுக்கு நேர்வழியைக் காட்டினாலும் அது சிவப்பு ஒட்டகைகளை விட - அதாவது உலகத்தின் அனைத்துச் சொத்துக்களையும் விடச் - சிறந்த சொத்தாகும்' (புகாரீ) என்பதுதான் அது. இதிலிருந்து போர்க்களத்தில் கூட அன்னார் மூர்க்கத்தனத்திற்கு இடமளிக்காமல் சத்தியப்

பிரச்சாரத்தையே தீர்க்கமாக வலியுறுத்தியுள்ளார்கள் என்பது புலனாகின்றது.

உணவுக்காகப் பிராணிகளை அறுக்கும்போது முறையாக அறுங்கள்; சித்திரவதை செய்யாதீர்கள்! என்ற கருத்தையும் நபிமொழி (முஸ்லிம்) வலியுறுத்துகின்றது.

ஒரு பறவையின் குஞ்சை எடுத்து ஒருவர் வைத்திருந்தபோது தாய்ப்பறவை பதற்றமுறுவதைக் கண்ட நபி (ஸல்) அவர்கள், குஞ்சைத் தாய்ப் பறவையிடம் ஒப்படைக்குமாறு கட்டளையிட்டார்கள். (திர்மிதீ, இப்னுமாஜா) இப்படி இஸ்லாம் அனைத்து ஜீவராசிகள் மீதும் கருணை காட்டச் சொல்கிறது.

இவையெல்லாம் போக மனிதநேயத்தின் முத்தாய்ப்பாக, முஸ்லிம் என்பதற்கு இலக்கணம் கூறும்போது கூட 'யாருடைய நாவு மற்றும் கரத்தினால் பிறர் தொல்லை பெறாமல் இருக்கின்றனரோ அவனே முஸ்லிம்' (புகாரீ, முஸ்லிம்) என்றும் 'அண்டை வீட்டுக்காரன் பசித்திருக்க தான் மட்டும் வயிறார உண்பவன் முஸ்லிமல்லன்' (ஹாகிம், தப்ரானீ) என்றும் நபி (ஸல்) அவர்கள் இலக்கணங்களைக் குறிப்பிட்டுள்ளார்கள்.

## எளிமையான சட்டங்கள்

உடலை வருத்தி உயர் நிலையை அடைவது என்ற பேச்சுக்கெல்லாம் இஸ்லாத்தில் இடமில்லை. மேனியைப் புண்ணாக்கும் வகையில் அலகு குத்துதல், தீ மிதித்தல், சாட்டையால் அடித்தல், பாத யாத்திரை செல்லல், ஆணிக்கட்டிலில் படுத்தல், நெடுஞ்சாண் கிடையாக தரையில் வீழ்தல், மணலில் உருளுதல், பேயாடுதல், மண்சோறு உண்ணல், துறவு பூணல், புலால் உண்ணாதிருத்தல் போன்ற சிரமங்களையெல்லாம் மேற்கொள்வதை இஸ்லாம் ஆதரிக்கவில்லை என்பதை விட எதிர்க்கிறது என்றே கூற வேண்டும். ஏனெனில் ஒரு முறை ஒருவர் யாருடனும் பேசாமல் வெயிலில் நின்று கொண்டிருந்தார். அதைக் கண்ட நபி (ஸல்) அவர்கள் அவரைப் பற்றி விசாரித்தார்கள். அப்போது ஒரு தோழர், “அவர் பெயர் இஸ்ராயீல்; வெயிலில் நிற்பதாகவும் அமரக்கூடாதென்றும் யாரிடமும் பேசுவதில்லை என்றும் நேர்ச்சை செய்திருக்கிறார்” என்றார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், “அவரை நிழலுக்கு வந்து அமரச் சொல்லுங்கள்! மக்களிடம் பேசச் சொல்லுங்கள்! இப்படிப்பட்ட நேர்ச்சைகளை இறைவன் விரும்புவதில்லை” என்றார்கள். (புகாரீ)

இதுபோலவே பூஜை, புனஸ்காரங்கள் என்ற பெயரில் குங்குமம், பூ, பழம், தேங்காய், ஊதுபத்தி,

சந்தனம், காணிக்கை என்றெல்லாம் இஸ்லாத்தில் செலவழிக்க வேண்டியதில்லை. சிலிகன், நியான், சோடியம், மெர்க்குரி போன்ற வாயுக்களின் வண்ண விளக்குகள் பிரகாசித்துக் கொண்டிருக்கும்போது குத்து விளக்கையும் மெழுகு வர்த்தியையும் ஏற்றி வைப்பது, தீபாராதனை செய்வது போன்ற விரயங்களை இஸ்லாம் வலியுறுத்துவதுமில்லை. பருப்பில் ஊற்ற வேண்டிய நெய்யை நெருப்பில் ஊற்றுவது, சிரட்டைக்குள்ளே இயற்கையாகவே பாதுகாப்பாகவும் கலப்படமற்ற பரிசுத்தமாகவும் அமைந்திருக்கும் தேங்காயைக் கல்லில் அடித்து உடைத்து மண்ணில் சிதறவிட்டு பிறகு அதை எடுத்து உட்கொள்ளல் போன்ற ஆரோக்கியமில்லாத அம்சங்கள் இஸ்லாத்தில் அங்கீகரிக்கப்படுவதில்லை. ஆக உடம்பை வருத்தியோ யாருக்கும் நன்மை பயக்காததையோ சுகாதாரமற்றதையோ இஸ்லாம் ஒருபோதும் வணக்கமாகவோ வழிபாடாகவோ அறிமுகப்படுத்துவதில்லை.

## மார்க்க விவகாரத்தில் மூழ்கக்கூடாது

ஆன்மீகம் என்ற போர்வையில் எதுவும் நடக்கலாம், நடத்தலாம் என்றோ உலக வாழ்க்கையில் அறவே பற்றற்று துறவு மேற்கொள்ள வேண்டும் என்றோ இஸ்லாம் வலியுறுத்துவதில்லை. அதனாற்றான் துறவை இஸ்லாம் அறமாகக்

கருதுவதில்லை. (பார்க்க அல்குர்ஆன்: 57:27)

சிலர், 'உலகத்தை வெறுக்க வேண்டும்; இவ்வுலகம் இழுக்கு; மறு உலகம்தான் நம் இலக்கு. உலகாயதம் நமக்கு வேண்டாம்!' என்றெல்லாம் கூறி உலகப்பற்றை அறவே அகற்றச் சொல்லி ஆன்மீகத்தில் மூழ்கச் செய்து வாழ்க்கையில் எந்த ஈடுபாடும் இல்லாமல் ஆக்கிவிடுகின்றனர். இதுவே பக்தியின் முத்திய முக்தி நிலை எனச் சிலாகித்துக் கூறுவோரும் உண்டு.

இஸ்லாம் இந்த நிலைக்கு முற்றிலும் முரண்படுகிறது. ஆன்மீகம் வேறு உலகம் வேறு என்று பிரிப்பதைக் கூட இஸ்லாம் ஏற்றுக் கொள்வதில்லை. ஆனால் இவ்வுலகமே சதம் என்ற எண்ணத்தையும் மறுவுலகத்தை விட இவ்வுலகையே முக்கியமாகக் கருதுவதையும் இஸ்லாம் வெறுக்கிறது. அதன் வழிகாட்டுதலைப் பாருங்கள்:

நீங்கள் (மறுமையை விட்டுவிட்டு) இவ்வுலக வாழ்க்கைக்கு அதிக முக்கியத்துவமளிக்கின்றீர்கள். ஆனால் மறுமை வாழ்க்கையோ மிகச் சிறந்ததும் நிரந்தரமானதுமாகும். (87:16,17)

மனிதர்களில் சிலர், 'எங்கள் இரட்சகா! இவ்வுலகிலேயே (எல்லாவற்றையும்) எங்களுக்குத் தந்துவிடு' என்று கூறுகிறார்கள். இத்தகையோருக்கு

மறுவுலகில் யாதொரு நற்பாக்கியமுமில்லை. அவர்களில் வேறு சிலரோ, 'எங்கள் இரட்சகா! இவ்வுலகிலும் நற்பாக்கியங்களைத் தருவாயாக! மறு உலகிலும் நற்பாக்கியங்களைத் தருவாயாக! மேலும் நரகின் வேதனையிலிருந்து எங்களைக் காப்பாயாக!' என்று கேட்கின்றனர். இப்படிப்பட்டவர்களுக்குத்தான் அவர்கள் சம்பாதித்த நற்பாக்கியங்களுண்டு. *(2:200-202)*

ஆக இவ்வுலகத்தை மட்டும் பெரிதுபடுத்தி மறுமையை அலட்சியப்படுத்துவதை இஸ்லாம் எதிர்க்கிறது. அதே நேரத்தில் மறுமை மட்டுமே போதும்; இவ்வுலக இன்பத்தில் அறவே ஈடுபாடு கூடாது என்று முடிவெடுப்பதை இஸ்லாம் அங்கீகரிக்கவுமில்லை. அது பற்றிய குர்ஆனின் போக்கைப் பாருங்கள்: ஆண்டவன் உனக்குக் கொடுத்ததிலிருந்து மறுவுலகத்தைத் தேடிக்கொள்! ஆயினும் இவ்வுலகில் உனக்குள்ள பங்கை மறந்து விடாதே! *(28:77)*

மக்காவிலிருந்து வந்த விருந்தாளி ஸல்மான் ஃபார்ஸீ (ரழி) என்பவரையும் மதீனத்து விருந்தோம்பி அபுத்தர்தா (ரழி) என்பவரையும் உடன்பிறவா சகோதரர்களாக முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் அறிவித்தார்கள். அதன் பிரகாரம் அபுத்தர்தாவின் வீட்டிற்குச் சென்ற ஸல்மானுக்கு பல தகவல்கள் கிடைத்தன. அதாவது அபுத்தர்தா பகலெல்லாம்

உபரியான நோன்பு நோற்பதாகவும் இரவெல்லாம் நின்று வணங்குவதாகவும் மனைவியுடன் எந்த ஒட்டும் உறவும் வைத்துக்கொள்வதில்லை என்றும் அறிகிறார். எனவே உபரியான நோன்பு மற்றும் இரவு வணக்கத்தைக் கைவிடுமாறு அபுத்தர்தாவை வலியுறுத்துகிறார். காலையில் அபுத்தர்தா, தமது சகோதரர் ஸல்மானுடைய அணுகுமுறையைப் பற்றி நபி (ஸல்) அவர்களிடம் முறையிட்டபோது நபி (ஸல்) அவர்கள், ஸல்மானுடைய அணுகு முறையைத்தான் சரிகாணுகிறார்கள்; அபுத்தர்தாவின் உலகப் பற்றற்ற தன்மையை அங்கீகரிக்கவில்லை. அத்துடன் நீர் உமது இறைவனுக்கும் (வழிபாடு), குடும்பத்தினருக்கும் (தேவைகளை நிறைவேற்றுதல்), உடலுக்கும் (ஓய்வு கொடுத்தல்), கண்களுக்கும் (உறங்குதல்), விருந்தாளிக்கும் (உபசரித்தல்) செய்ய வேண்டிய கடமைகள் உள்ளன. அந்தந்த கடமைகளை முறையாக நிறைவேற்றுவீராக! என்று அபுத்தர்தாவுக்கு உபதேசிக்கவும் செய்தார்கள். (புகாரீ, முஸ்லிம்)

இதுபோலவே இன்னொரு நிகழ்ச்சி: ஹன்ளலா (ரழி) என்றொரு நபித்தோழர். நபியவர்களின் சபையில் அமர்ந்து உபதேசங்களைக் கேட்கும்போது தமக்கு சொர்க்கமும் நரகமும் கண்களுக்கு முன்னால் காட்சியளிப்பதாகவும்

சபையை விட்டு வெளியேறி குடும்பத்தாரை அடைந்ததும் அந்தக் காட்சியெல்லாம் மறைந்து விடுவதாகவும் உணர்ந்திருக்கிறார் சபையில் இருக்கும்போது ஒரு நிலையும் சபையை விட்டு வெளியேறியதும் மறு நிலையும் நிலவுகின்றன என்றால் அது இரட்டை வேடம்தான் எனக் கருதி தன்னை 'நயவஞ்சகன்' என்று முடிவும் செய்துவிட்டார். இதைப் பற்றி நபி (ஸல்) அவர்களிடம் கேட்டபோது அவர்கள், மறுமை உணர்வுகளுக்கு நேரத்தின் ஒரு பகுதியை ஒதுக்குவது போலவே அதே அளவுக்கு நீங்கள் உலக ஆதாரங்களுக்கும் நேரத்தை ஒதுக்க வேண்டும். எனது சபையில் இருக்கும் போது உங்களுக்கு இருக்கின்ற அதே உணர்வு தொடர்ந்து நீடிக்குமானால் உங்களின் பாதைகளிலும் படுக்கைகளிலும் மனித சஞ்சாரங்கள் இருக்காது எனக் கூறினார்கள். (முஸ்லிம்) இப்படி ஏராளமான நிகழ்ச்சிகள் உள்ளன.

இவ்வுலகத்தை விட மறு உலகத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று ஒரு பக்கம் வலியுறுத்தினாலும் இரண்டில் எந்த ஒன்றையும் விடக்கூடாது என்பதை இஸ்லாம் அழுத்தமாகக் கூறுகிறது என்பதை இந்தச் சான்றுகள் தெளிவுபடுத்துகின்றன.

## தவறுதல், மறதி, நிர்பந்தம் குற்றங்களில்லை

சுய அறிவு, சொல்லறிவு, பட்டறிவு என அறிவின் தராதரங்கள் ஆளுக்கு ஆள் வேறுபட்டாலும் அனைவருக்கும் சராசரி பலவீனங்கள் உள்ளன. அதாவது எவ்வளவு பெரிய அறிவு ஜீவியாக இருந்தாலும் ஆற்றல் மிக்கவர்களாக இருந்தாலும் அனைத்து வசதிகளும் உள்ளவர்களாக இருந்தாலும் அவர்களால் சிலபோது சுயக் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்ள இயலாத சந்தர்ப்பங்கள் நேரிடத்தான் செய்கின்றன. திட்டமெதுவுமின்றி திடீரென்று நிகழ்ந்துவிடும் தவறுகள், மறதியால் விடப்படும் கடமைகள் அல்லது மீறப்படும் உரிமைகள், நிர்ப்பந்தத்தினால் நடைபெறும் குற்றங்கள் ஆகியவை இறைவனால் பாவங்களாகப் பதிவு செய்யப்படமாட்டாது என்ற மனிதாபிமான சட்டங்கள் இஸ்லாத்தில் விதிகளாக அமைக்கப்பட்டுள்ளன.

தவறியோ மறதியினாலோ நிர்ப்பந்தம் செய்யப்பட்டோ நிகழும் பாவங்கள் குற்றங்களாகப் பதிவுசெய்யப்படமாட்டாது என்பது நபிமொழி. (இப்னுமாஜா)

அதுபோல பைத்தியக்காரன் தெளிவடையும் வரை, உறங்குபவன் விழிக்கும் வரை, சிறார்கள்

பருவமடையும் வரை அவர்களின் தவறுகள் குற்றங்களாகக் கருதப்படமாட்டாது என்பதும் நபிவாக்காகும். (அஹ்மத், இப்னு குஸைமா)

## சட்டங்களும் சலுகைகளும்

கடுமையான சட்டங்களை விதிக்கும் மதங்கள் ஒருபக்கமிருக்க மதங்களின் பெயரால் தங்களுக்குத் தாங்களே சிரமங்களை ஏற்படுத்திக்கொள்ளும் மதவாதிகளுக்கும் பஞ்சமில்லை. "RULES YOU CAN BEND THEM BUT NOT BREAK THEM" என்பார்கள். ஆமாம், சட்டங்கள் வளைந்து கொடுக்க வில்லையெனில் அதை உடைக்க வேண்டியது வரும். ஆனால் இஸ்லாத்தில் சட்டங்கள் இருப்பது போலவே சலுகைகளும் உள்ளன. வேறு வார்த்தைகளில் சொல்வதானால் சலுகைகளும் சட்ட வடிவம் பெற்றுள்ளன. உதாரணமாக, குர்ஆன், உண்ணக் கூடாதவற்றைப் பட்டியலிடும் போது இவ்வாறு கூறுகிறது:

தானாகவே செத்தது, இரத்தம், பன்றியின் மாமிசம், அல்லாஹ் அல்லாதவற்றின் பெயர் சொல்லப்பட்டது ஆகியவற்றைத்தான் உங்கள் மீது அல்லாஹ் தடை செய்திருக்கிறான். ஆனால் எவரேனும் பாவம் செய்யாத நிலையில் - வரம்பு மீறாமல் (இவற்றை உண்ண) நிர்பந்திக்கபபட்டால்

அவர் மீது குற்றமில்லை. நிச்சயமாக அல்லாஹ் கருணை மிக்கோனும், மன்னிப்பவனுமாக இருக்கிறான். 2:173

## அனைவருக்கும் ஒரே சட்டம்

உரிமையியல் மற்றும் குற்றவியல் சட்டங்களில் எந்தப் பாரபட்சமும் இஸ்லாத்தில் இல்லை. மனிதன் வாழுகின்ற போது அவன் எதையெதை அனுபவிக்கலாம், எதையெதை அனுபவிக்கக்கூடாது என்பது பற்றிய ஒரே சட்டம்தான் அனைவருக்கும். உதாரணமாக புலால் உண்ணலாம் எனில் யாவரும் அதை உண்ணலாம்.

அது போலவே மரணத்திற்குப் பிறகு நடக்கும் காரியங்களிலும் ஒரே சட்டம். உதாரணமாக இறந்தோரைப் புதைக்க வேண்டும் என்றால் எல்லா பிணங்களையும் புதைக்கத்தான் வேண்டும். எரிப்பதற்கு யாருக்கும் அனுமதியில்லை.

மேலும், குற்றவியல் தண்டனைச் சட்டங்களிலும் யாருக்கும் பாரபட்சம் காட்டுவதற்கு இஸ்லாத்தில் வழியில்லை. திருடக்கூடாது என்றால் யார் திருடினாலும் தண்டனை ஒன்றுதான். ஒரு தடவை உயர் குலத்துப் பெண்ணாக மதிக்கப் பெற்ற ஃபாத்திமா என்ற ஒரு பெண் திருடிவிட்டதையறிந்த சிலர் அவரைத் தண்டனையிலிருந்து

விடுவிப்பதற்காக நபி (ஸல்) அவர்களிடம் பரிந்து பேச முயற்சிகளை மேற்கொண்ட போது நபி (ஸல்) அவர்கள், முஹம்மதுடைய மகளாகிய ஃபாத்திமாவே திருடியிருந்தாலும் அவளது கையையும் நான் வெட்டுமாறு கட்டளையிடத்தான் செய்வேன் என்று கூறினார்கள். (புகாரீ, முஸ்லிம்)

இப்படி சட்டத்தில் எந்த ஏற்றத்தாழ்வையும் இஸ்லாம் அனுமதிக்காமல் அனைவருக்கும் ஒரே சட்டத்தை அமுல்படுத்துகிறது.

## இறுதியாக...

இஸ்லாத்தின் தனித்துவங்களை இன்னும் அடுக்கிக் கொண்டே போகலாம் என்கிற அளவுக்கு அதன் பட்டியல் நீண்டுகொண்டே போகும். மேலோட்டமாக சில விஷயங்களை மட்டும் நேயர்களின் முன்னால் வைக்கவே அவை அரை நூறு பக்கங்களைத் தாண்டிவிட்டன.

இத்தனை பங்கங்களைப் புரட்டிப் படித்துவிட்ட பிறகும் முஸ்லிமல்லாத சகோதரர்களின் உள்ளங்களில் சில நெருடல்கள் ஏற்படும். அவற்றில் சிலவற்றையும் அவற்றிற்கான பரிகாரங்களையும் சுருக்கமாக இங்கு பார்த்து விடுவோம்.

*நெருடல்-1: அவரவர் மதம் அவரவருக்குப்*

*பெரிதாகத் தோன்றலாம். இதில் ஒருவன் இன்னொருத்தனின் மதத்தைப் பற்றி அறிய வேண்டிய அவசியமென்ன?*

இந்தக் கண்ணோட்டம் அடிப்படையிலேயே தவறானது. தன்னைப் பற்றியோ தான் சார்ந்திருக்கும் மதத்தைப் பற்றியோ போதுமான பிடிப்போ நம்பிக்கையோ இல்லாதவர்களின் எண்ண வடிவமிது.

ஏனெனில் மனிதன் நாளுக்கு நாள் முன்னேறி வருபவன். மற்ற ஜீவராசிகளிலிருந்து அவன் வேறு படுவதே இந்த முன்னேற்ற அறிவின் மூலமாகத்தான்; பகுத்தறிவினாலன்று. காரணம், புலிக்கு பகுத்தறிவு இருப்பதால்தான் 'புலி பசித்தாலும் புல்லைப் புசிக்காது' என்கின்றோம். அதுபோல எஜமானனையும் அந்நியனையும் நாய்களுக்கு வேறுபடுத்திக்காட்டுவது அதன் பகுத்தறிவன்றோ? ஆக, மனிதனுக்கு மட்டும் தான் பகுத்தறிவு உள்ளது என்ற வாதமே தவறு.

விலங்கினத்திற்கு நன்மை - தீமையைப் பிரித்தறியத் தெரியாது என்று சிலர் கூறலாம். மனிதனுக்கு மட்டும் என்ன வாழ்கிறது? தனக்கு எது சாதகம், எது பாதகம் என்பதைப் பகுத்தறிய இயலாத அல்லது ஒன்றைத் தனக்குப் பாதகம் என்று பகுத்தறிந்த பின்பும் அதை அனுபவிக்கும் மனிதனை என்ன சொல்வது?

எனவே மனிதனல்லாத பிற ஜீவராசிகளுக்கும் பகுத்தறிவு உள்ளது என்பது நிரூபணமாகின்றது. ஆதலால் மனிதன் வேறுபடுவது முன்னேற்ற அறிவின் மூலமாகத்தான். ஆம்! ஒருவன் அறுபது வயது வரை வாழ்ந்து மறைந்தால் அதற்குப் பிறகு பிறப்பவனுக்குப் பிறப்பால் முதல் வயது தொடங்குகிறது என்றாலும் அவனுக்கு அனுபவத்தால் அறுபத்து ஒன்றாவது வயது தொடர்கிறது என்பதே உண்மை. அதாவது மனிதன் தன்னைச் சுற்றி நடக்கும் அம்சங்களைக் கண்டு படிப்பினை பெறுபவன்; பேராசை உள்ளவன்; தேவைகளை அதிகமாக்குபவன்; சோம்பேறித்தனத்தின் வரவுக்காக சாதனங்களை உருவாக்குபவன்; புதுமைகளை இரசிப்பவன்; நவீனங்களை நேசிப்பவன். இப்படி மனிதன் ஆயிரமாயிரம் மாற்றங்களுக்கு அடிமைப்பட்டவன். எனவேதான் கைவிசிறியிலிருந்து மின் விசிறிக்கு அவன் மாறினான்; அகல் விளக்கிலிருந்து மின்விளக்குக்கு ஏறினான்; கைவினைகளிலிருந்து ஆலைகளுக்கு ஏகினான்.

ஆனால் எந்த நாயாவது, "நாம் எவ்வளவு காலம் குட்டிச் சுவர்களிலும் விளக்குக் கம்பங்களிலும் காலைத் தூக்கி வைத்துக்கொண்டு சிறுநீர் கழிப்பது? இனியாவது ஒரு கழிவறை உருவாக்கி அதில் நாகரிகமாக மலம் - ஜலம் கழிப்போம்" என்று முடிவு

செய்ததாக வரலாறு உண்டா?

எந்த பறவையாவது, "இனி நமது கூடுகளைக் கலைத்துவிட்டு காங்கிரீட்டில் வீடுகளைக் கட்டிக் கொள்வோம்" என்கிற முடிவுக்கு வந்ததுண்டா? இல்லையே! அப்படியானால் எந்த உயிர்ப் பிராணிக்கும் இல்லாத ஒரே அறிவு – முன்னேற்ற அறிவு மனிதனுக்கு மட்டுமே என்பதில் ஐயமில்லை.

எனவே மனிதன், நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக ஞானத்தை அதிகப்படுத்த வேண்டும். கற்றுக்கொள்ளும் ஆர்வம் மேலோங்க வேண்டும். ஞானத் தாகமும் அதைத் தேடும் முயற்சியும் தொடர வேண்டும். அப்போதுதான் அவன் மனிதனாக மதிக்கப்படுவான். காரணம், அதனால் தானே அவன் பிற விலங்குகளிலிருந்து வேறுபடுகின்றான். மற்ற துறைகளைப் பற்றி எங்கு விசாரித்தால் விவரங்கள் கிடைக்கும் என்று தேடி அலைவதுபோல் ஆன்மீக தகவல்களையும் அலைந்துத் தேட வேண்டும்.

ஆம்! நேற்றைக்கு முந்தைய தினம் வரை நாம் சரி என்று நம்பியிருந்த ஒன்று நேற்றைக்கு தவறு என்றும், நேற்றைக்கு அசாத்தியம் என்று நாம் நம்பியிருந்த ஒன்று இன்றைக்கு சாத்தியம் என்றும் நிரூபிக்கப்படுகின்ற அளவுக்கு ஆய்வுகளும்

ஆராய்ச்சிகளும் மலிந்துவிட்டன. எனவே, ஆராய்ச்சி மேற்கொள்ளும் சிந்தனை அவசியம் வேண்டும்.

புதிதாக எதையேனும் அறியப்போய் பிறகு அதையே தேர்ந்தெடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டால்..? என்றும் நாம் அச்சப்படத் தேவையில்லை. ஏனெனில், எதையும் நம்பிவிடுவது ஆபத்து; எதையுமே நம்பாமலிருப்பது அதை விடவும் ஆபத்து என்கிற தோரணையில் நமது நம்பிக்கையைப் புதுப்பித்துக்கொள்வது ஒன்றும் தவறில்லை. புதுப்பிக்கும் முன்பு நாம் சார்ந்திருக்கும் கொள்கை யாது? அது நமக்குத் தர வேண்டியதும் நாம் அதிலிருந்து பெற வேண்டியதும் யாவை? என்கிற வகையில் மட்டுமல்ல, மற்றவர்களின் கொள்கை எப்படி? அது நமது கொள்கையோடு ஒட்டி வருகின்றதா, இல்லை வெட்டிப்போகின்றதா? என்றும் ஆராய வேண்டும். அதன் முடிவு எப்படி அமையுமோ அப்படியே நம்மையும் நாம் திருத்திக்கொள்ள வேண்டும். நாம் ஒன்றில் எவ்வளவு காலமாக இருக்கின்றோம் என்பதை விட எதில் இருக்கின்றோம் என்பது முக்கியமில்லையா? எனவே எது சரியெனப் புரிந்துகொள்ளப்படுகின்றதோ அதைத் தேர்ந்தெடுப்பதுதானே முறை? அந்த வகையில் நீண்ட - நல்ல ஆராய்ச்சிக்குப் பின்பு நாம் எடுக்கின்ற முடிவை ஏற்பதில் பழமை, பாரம்பர்யம்,

குடும்பம், சுற்றுப்புறச் சூழல், தொழில், முகஸ்துதி, விமர்ச்சனம் போன்ற அற்ப காரணங்கள் தடைகளாக அமைய அனுமதிக்கலாகாது. ஆம், அந்தத் தீர்க்கமான முடிவை யார் வெறுத்தாலும் நாம் ஏற்றேயாக வேண்டும்.

*நெருடல்-2: இஸ்லாம் மார்க்கம் சிறந்ததாக இருந்தாலும் அதிலிருப்பவர்கள் மோசடி செய்கின்றனர்; வட்டி வாங்குகின்றனர்; தீவிரவாதத்தில் ஈடுபடுகின்றனர். அப்படியானால் இஸ்லாம் அவர்களைத் திருத்தவில்லையே!*

மனிதர்கள் பல விதமானவர்கள். எனவே எல்லோருமே நல்லவர்களான பிறகுதான் நான் நல்லவனாவேன் என்று சொல்வது சரியில்லை.

ஒரு கொள்கை, சரியானதா? இல்லையா? என்று ஆராய்வது நமது கடமை. ஆய்வின் முடிவில் கொள்கை சரியானதுதான் என்று உணர்ந்த பின், அதை ஏற்றுக் கொண்டவர்கள் சரியில்லையே என்று கூறி, அந்தக் கொள்கையை மறுக்கத் துணிவது நியாயமில்லை.

ஏனெனில், நான் நல்லதை ஏற்று அதன் பிரகாரம் செயல்படுவேன் என்று முடிவெடுத்து அதை நடைமுறைப்படுத்தினால் இந்த உலகத்தின் ஓர் அயோக்கியன் திருந்திவிட்டான் என்று அர்த்தம். இப்படி அவரவரும் முடிவு செய்துவிட்டால் உலகில்

அயோக்கியத்தனம் அறவே இல்லாமற் போகும்.

ஆனாலும் முஸ்லிம்கள் தவறாக நடப்பதை நான் நியாயப்படுத்த விரும்பவில்லை. இஸ்லாத்தை முழுமையாக நடத்தைகள் மூலம் வெளிப்படுத்த வேண்டிய தார்மீகக் கடமை ஒவ்வொரு முஸ்லிமையும் சாரும். அதே நேரத்தில் அவர்கள் தவறிழைக்கிறார்கள் என்பதற்காக நானும் நல்லதின் பால் கவனம் செலுத்தமாட்டேன் என்பது அவன் சேற்றைப் பூசியதால் நான் மலத்தைப் பூசுவேன் என்று கூறுவதற்குச் சமம்.

இப்படிப் பல நெருடல்கள் இருந்தாலும் அவற்றையெல்லாம் குறிப்பிட்டு விளக்கமளிக்க இச்சிறு நூல் போதாது.

இறுதியாக... ஒரு ரூபாய் நோட்டு செல்லுமா செல்லாதா? என்று அறிய நூறு கடைகள் ஏறி இறங்குவதற்குத் தயாராகும் நாம், நாம் சார்ந்திருக்கும் மதம் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதில்லையே, ஏன்?

குறிப்பாக மதம் என்பது, கடவுட்கொள்கை, வேதம், வழிபாட்டுமுறை முதலானவை போக மனிதனின் அன்றாட வாழ்க்கையில் அதன் பங்களிப்பு என்ன? என்பதைப் பற்றியும் நாம் ஆராய வேண்டும். மனிதனின் தனி வாழ்க்கை மற்றும் சமூக

வாழ்க்கையின் அனைத்துக் கட்டங்களிலும் தலையிட்டு நன்னெறி வழங்குவதில் மதத்திற்கு முக்கியமான ஆளுமை உள்ளது.

மனிதனின் உள்ளம் மற்றும் உடல் ஆரோக்கியத்தின் பால் அக்கறையுள்ள கொள்கை-கோட்பாடுகள், சமத்துவம், அனைவருக்கும் பொதுவான பாரபட்சமற்ற சட்டங்கள் ஆகியவை போக மனிதன் அனுசரிக்கத் தகுந்த வாழ்க்கைத் திட்டங்களையும் நமது மதம் உள்ளடக்கியுள்ளதா? என்று ஆராய வேண்டியது நமது கடமை.

இந்த ஆய்வில் சற்றும் கஞ்சத்தனம் காட்டாமல் தாராளமாக நடந்துகொள்ள வேண்டும். ஏனெனில் உலக வாழ்க்கையில் ஏற்படும் சில நஷ்டங்களை ஈடுகட்ட பல சந்தர்ப்பங்கள் வாய்க்கலாம். ஆனால் நாம் அனைவரும் நம்பியிருக்கின்ற மரணத்திற்குப் பிந்தைய இன்னொரு வாழ்க்கையில் தண்டனைகளற்ற சன்மானம் பெற இவ்வுலக வாழ்க்கை காரணமாக அமைய வேண்டும். அதற்குச் சரியான வழிகாட்டுதல் தேவை. அந்த வழிகாட்டுதலை ஒரு மதம்தான் தர இயலும். அத்தகைய தகுதி வாய்ந்த மதம் எது? என்பதைத் தெரிந்தெடுக்க தாராள முயற்சி தேவை. அதற்காக நாம் சர்ந்திருக்கின்ற மதத்தைப் பற்றிய விரிவான தகவல்களைத் திரட்டி திறந்த மனதுடன் அலச

வேண்டும். கூடவே பிற மதங்களைப் பற்றிய விவரங்களையும் சேகரித்து ஆராய வேண்டும்.

இங்கே மிக முக்கியமான ஒரு கருத்தை நாம் கவனிக்க வேண்டும். அது யாதெனில், மத ஆராய்ச்சி என்று வருகிற போது அந்தந்த மதங்களின் ஆதார அடிப்படைகளில்தான் சத்தியத்தைத் தேட வேண்டும். மாறாக மதங்களைச் சார்ந்திருப்பவர்களின் செயல்பாடுகளை வைத்து எந்த முடிவுக்கும் வரக்கூடாது. கொள்கை நல்லதாயின் அதைப் பின்பற்றுபவர்கள் எப்படியிருந்தாலும் அந்த நல்ல கொள்கையை நான் பின்பற்றி சிறப்புறுவேன் என்று சபதமேற்க வேண்டும். இதுவே சிறந்த மனிதனுக்கு இலக்கணம். இதில் எந்தத் தடைகளையும் பொருட்படுத்தத் தேவையில்லை. ஏனெனில் இது முற்றிலும் நமக்கு நாமே ஏற்படுத்த வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கை. மறுவுலகில் ஒருவன் செய்த முயற்சியின் பலனை மற்றவன் அனுபவிப்பதுமில்லை. ஒருவனின் சுமையைப் பிறர் சுமக்கப்போவதுமில்லை.

இனி, சத்தியப் பாதையை நோக்கிய உங்களது இலட்சியப் பயணம் தொடரட்டும். எல்லாம் வல்ல இறைவன் உலக மக்கள் அனைவருக்கும் நேர்வழி காட்டப் போதுமானவன்!

⏮ ஶுஶுஶு ⏭

## من إصدارات

# هداية

المكتب التعاوني للدعوة والإرشاد
وتوعية الجاليات في الخبر

## أهـــداف المكتب

- دعوة غير المسلمين للإسلام وترغيبهم في اعتناق الدين الإسلامي .
- متابعة من أسلم وتعليمه الأحكام الشرعية والمبادئ الهامة .
- دعوة المسلمين وتصحيح ماعندهم من أفكار خاطئة وحثهم على انتهاج المنهج الإسلامي المبني على هدى الله عز وجل وسنة رسوله ﷺ .
- تدريب المسلمين لدعوة غير المسلمين ، وذلك وفق أصول شرعية وباستشارة من أهل الخبرة في هذا المجال .
- الاتصال والتنسيق والتعاون مع الهيئات والمراكز الإسلامية بما يخدم الإسلام والمسلمين .
- طبع ونشر الكتاب والشريط الإسلامي بعدة لغات في أبواب التوحيد والإيمان و الآداب والأخلاق والأحكام وتوزيعها في الداخل والخارج .

مصرف الراجحي Al Rajhi Bank 1 3 9 6 0 8 0 1 0 1 3 7 1 7 6

hedayh_ar  hedayh.ar  hedayh.org  0508255557

ردمك: ٥-٩-٩٥٨٧-٩٩٦٠

مطبعة النرجس - ت: ٢٢١٦٦٥٣ ف: ٢٢١٦٨٦٦

For more Tamil Islamic Books please visit www.qurankalvi.com